'சங்கரராம்'

புதையல்

சங்கரராஜு

காமர்ஸ் பப்ளிகேஷன்ஸ்
41-42, ராயப்பேட்டை ஹை ரோட்,
சென்னை - 14.

முதல் பதிப்பு
அக்டோபர், 1949

ரூ. 1 - 0

அல்லயன்ஸ் பிரஸ்,
மயிலாப்பூர் :: சென்னை-4

குறிப்பு

தமிழ் நாட்டில் குறுநாவல் படிப்பவர்களின் தொகை நாளுக்கு நாள் வளருகிறது. குறுகிய பொழுதில் வாழ்க்கையின் பல கோணங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது குறுநாவல். வாசகர்களின் இந்த ஆவலைத் திருப்திப்படுத்துவதற்கு நாங்கள் வரிசையாகச் சில குட்டி நாவல்களை வெளியிடத் திட்டமிட்டிருக்கிறோம்.

இந்த வரிசையில், முதல்முதலில் 'புதையல்' என்ற இந்த நீண்ட கதையை வெளியிட நாங்கள் பெருமை கொள்கிறோம். பிரசித்த எழுத்தாளரான 'சங்கரராம்' அவர்களின் பேனாமுனையிலிருந்து வெளிவந்துள்ள இந்தக் கதை, நகரவாசியான புரொபசர் ஒருவர் கிராம வாழ்க்கையின் நன்மைகளை அநுபவிக்க முனைந்து, உண்மையான புதையலைப் பெற்ற வரலாற்றைச் சித்திரிக்கிறது. சங்கரராம் அவர்களின் மற்ற நவீனங்களைப் போலவே, வாசகர்கள் இதையும் வரவேற்று மகிழ்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

—காமர்ஸ் பப்ளிகேஷன்ஸ்.

புதையல்

1

காலை நேரம் சுமார் ஏழரை மணி இருக்கும். வண்ணாரப்பேட்டையில் ஒரு குறுகலான தெருவில் டாக்டர் வேதாசலம் தமது மோட்டார் வண்டியை வெகு ஜாக்கிரதையாக ஓட்டிக்கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்த முத்துக்கண்ணு சிரித்தார்.

"காலேஜிலே காத்தாட ஒரு மணியோ, ரெண்டு மணியோ, பசங்களோடு வம்படிச்சிட்டு வராப் போலே இல்லை, ஸார். குழந்தைகள் குறுக்கவும் நெடுக்கவும் ஓடறதைப் பாருங்கோ. அவுங்களே வந்து சக்கரத்தின் கிழே விழுந்தாலும், நம்பமேலேதான் குத்தம் சொல்லுவாங்க. நீங்களும் கார் வாங்கப் போறீங்களே. அப்போ பார்க்கமாட்டேன்?" என்றார் டாக்டர் புன்முறுவலுடன்.

"இருந்தாலும் நீங்கள் ரொம்ப, ரொம்ப உஷார்" என்றார் முத்துக்கண்ணு, சிரித்த முகத்துடன்.

"ஊம், இளங்கன்று பயம் அறியுமா?—சரி, வீட்டு நெம்பரைக் கவனியுங்க."

முத்துக்கண்ணு வலது புறமாகப் பார்த்துக் கொண்டே வந்தார். அதற்குள், "புரொபஸர் முத்துக் கண்ணு" என்று பேசிக்கொள்வது அவர் காதில் விழவே, காரை நிறுத்தச் சொல்லித் திரும்பிப் பார்த் தார். ஒரு வாலிபன் அவரிடம் வந்து வணக்கத்துடன் நமஸ்கரித்தான்.

"சுந்தரம் வீடு தெரியுமா உனக்கு?"

"தெரியும், ஸார். அதோ, அந்தக் குப்பைத் தொட்டி வைத்திருக்குதே, அந்த வீடுதான், ஸார். நெம்பர் 18" என்று சொல்லிக்கொண்டே, அவன் அதைக் காண்பிக்க விரைவாக முன்னே சென்றான்.

அது மிகவும் தாழ்ந்த ஓட்டுபில்லை வீடு. டாக்டர் முன்னும், ஆசிரியர் முத்துக்கண்ணு பின்னுமாக உள்ளே நுழைந்தனர். அதில் ஆறு குடும்பங்கள் வசித்தன. பின் கட்டில், ஒரு வராந்தாவில் சாக் கடை ஓரமாகத் தம் மாணவனைப் படுக்கவைத்திருப் பதைக் கண்டு முத்துக்கண்ணு மிகவும் வருந்தினார். இவர்களுடைய வரவைச் சிறிதும் எதிர்பாராததால், அங்கே சற்றுப் பரபரப்பு ஏற்பட்டது. குடித்தனக் காரர்களெல்லாம் கூடிவிட்டனர்.

"வாத்தியாரே டாக்டரை இட்டுக்கினு வந்து பார்க்கணுமின்னால், அது எவ்வளவு நல்ல பிள்ளை யின்னு பேர் எடுத்திருக்கணும்?" என்றாள் ஒரு பெண் பிள்ளை.

"அது அவ்வளவு நல்லாப் படிக்குங்களாம்" என்றாள் மற்றொருத்தி.

இதையெல்லாம் கேட்க, சுந்தரத்தின் அருகில் நின்றுகொண்டிருந்த அவனுடைய தங்கை மீனாக்ஷிக்கு

அழுகை வந்துவிட்டது.

காய்ச்சலின் வேகத்தால், கண்களை மூடி மூடித் திறந்துகொண்டிருந்த சுந்தரம், தன் ஆசிரியர் முத்துக் கண்ணு வந்திருப்பதை உணர்ந்துகொண்டதும், ஆத்திரத்தோடு எழுந்து உட்கார முயன்றான். அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவனுடைய பாட்டி, முத்துக்கண்ணு, டாக்டர் எல்லாருமாகச் சேர்ந்து, அவனைச் சமாதானம் செய்து படுக்கவைத்தனர். டாக்டர் பரீக்ஷித்துக்கொண்டு இருந்தபோது, சுந்தரம் முத்துக்கண்ணுவைப் பார்த்து, "அடுத்த வாரம்—பரீக்ஷை—" என்று பலபல வென்று கண்ணீர் விட்டான்.

"அதுக்குள்ளே லகுவாய்ப் போயிடும், தம்பி, பயப்படாதே" என்று சொல்லிவிட்டு, டாக்டர் எழுந்தார். முத்துக்கண்ணுவும் அவனைத் தட்டிக் கொடுத்து தைரியம் ஊட்டி, அவனிடம் விடைபெற்றுக்கொண்டார்.

"பயம் ஒண்ணும் இல்லையிங்களே? சிறுவயதிலேயே தாய்தகப்பனை முழுங்கிட்டு துங்க. என் வளத்தை வீணாகாதே?" என்று, இதுவரையிலும் சும்மா இருந்த அந்தக் கிழவியும் அழ ஆரம்பித்தாள்.

"அட, ஒண்ணும் இல்லைங்க. இவ்வளவு அநுபவப்பட்டவங்க, நீங்கள்கூடவா இப்படி பயப்படறது?" என்று டாக்டர் சொல்லிக்கொண்டே வாசற்புறம் சென்றார். கிழவியும் மற்றும் சிலரும் அவரைப் பின்தொடர்ந்து வந்தனர். தெருவுக்கு வந்ததும் டாக்டர் சுந்தரத்தின் பாட்டியைப் பார்த்து, "என்னுங்க, அம்மை காணப்போவுது. இது உங்களுக்குக்

கூடத் தெரியில்லையே! எல்லாம் ஒரு மாதிரியாய்ப் போயிடும். ரொம்ப உபத்திரவம் இருக்காது. வீணாய்க் கலாட்டாப் பண்ணாதீங்க" என்று சொல்லிக் கொண்டே முத்துக்கண்ணுடன் வண்டியிலே ஏறிக் கொண்டார். வண்டி நகர்ந்த பிறகு, "அவன் பரீக்ஷைக்கு எழுதுறது கஷ்டமின்னு சொல்லுங்க" என்றார் முத்துக்கண்ணு.

"ஐந்தாறு நாளைக்கப்புறந்தான் அவனுக்கு அது மும்முரமா யிருக்கும். அடுத்த பரீக்ஷைதான்."

"அட கடவுளே! அவ்வளவு தூரம் அவன் எப்படித் தாக்குப்பிடிக்கப் போறான்? போன வருஷமே ஏதாவது வேலை பார்த்துக்கொண்டு, தன் பாட்டிக்கு உதவி செய்யணுமின்னு சொல்லிக்கொண்டிருந்தான். நல்ல பையனுங்க. பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் வீட்டு விஷயமெல்லாம் எனக்குச் சொல்லி யிருக்கான். மேல் மேலே விருத்தி அடைய வேண்டியவன். இப்படித் தலையெடுக்க உடாமல் அடிச்சால், அவன் என்ன செய்வான்?" என்று முத்துக்கண்ணு வருந்திக்கொண்டே போனார்.

2

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, ஒரு ஞாயிற்றுக் கிழமை காலையில், ஆசிரியர் முத்துக்கண்ணு, ஸ்நான பானங்களை முடித்துக்கொண்டு, புதிதாக லண்டனி லிருந்து வந்த சில பத்திரிகைகளைப் படித்து, அவைகளில் சில பாகங்களைப் பென்ஸிலால் 'மார்க்' செய்து கொண்டு இருந்தார். விசாலமான அவருடைய அறையில், அவர் முன் சுவரோரமாய் இருந்த மூன்று

பீரோக்கள் நிறையப் புத்தகங்கள் இருந்தன. மேஜை யின்மீது தாறுமாறுமாகச் சில பத்திரிகைகள் விழுந்து கிடந்தன. அவருடைய தாயார் வந்து எட்டிப் பார்த்ததைக்கூட அவர் கவனிக்கவில்லை யென்றால், படிப்பில் அவர் மனம் எவ்வளவு ஆழ்ந்து கிடந்ததென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இங்கிலாந்து, அமெரிக்கா முதலான இடங்களுக்குச் சென்று 'ஆசிரியர்' பட்டத்தையும் யோக்கியதையை யும் பெற்றுவிட்டாரே ஒழிய, முத்துக்கண்ணுக்கு அப்படி வயது ஒன்றும் அதிகமாக ஆகிவிடவில்லை. இருபத்தொன்பதே இன்னும் முடியவில்லை. பார்த் தவர்கள் அவரையும் ஒரு கல்லூரி மாணவனென்றே நினைப்பார்கள். ஒற்றை நாடிப் பேர்வழி என்றே சொல்ல வேண்டும். அதிக உயரமும் இல்லை. வேலை யில் ஈடுபட்டிருக்கும் சமயம் தவிர மற்றப் பொழு தெல்லாம், அவருக்கு ஒரே ஆட்டமும் பாட்டமுந் தான். மாடிப்படிகள் அவர் ஒவ்வொன்றாக ஏறி வழக்கமில்லை. கால்பந்து, கைப்பந்து முதலிய எல்லா விளையாட்டுக்களிலும் மாணவர்களோடு தாமும் கலந்து கொள்வார். அதனால் மாணவர்கள் அவரை வழி காட்டும் தோழராகப் பாவித்ததில் ஒன்றும் ஆச்சரிய மில்லை. கூடுமானவரையில், தம்மிடம் படிக்கும் ஒவ் வொரு பிள்ளையினுடைய கஷ்ட சுகங்களைத் தெரிந்து கொள்வார். தம் சக்திக்கு மிஞ்சியும் சில சமயங் களில் அவர்களுக்குச் சகாயம் செய்ய முன்வருவார். மாணவர்களுக்கு அப்படிப்பட்டவரின் மீது அள வில்லா அபிமானமும் கௌரவமும் எப்படி இல்லாமல் போகும்? அவரைக் கண்டு பொறுமை கொண்ட

ஆசிரியர்களும் சிலர் உண்டு. தனியாய் இருக்கும் பொழுது, "பிரம்மசாரிக் கட்டை.. என்ன செலவு? நம்ம பெரியவங்களும் சம்பாதிச்சு வச்சிருந்தால், நாமுந்தான் வாரி இறைக்கலாம்" என்று அவர்கள் முணுமுணுப்பது வழக்கம். இவ்விஷயம் ஏதாவது முத்துக்கண்ணுவின் காதுக்கு எட்டினுல், அவர் அதை லட்சியமே செய்யாமல், புருவங்களை உயர்த்திப் புன்முறுவல் பூப்பார். அவருக்குக் 'குஷி' பிறந்த போதெல்லாம், இவ்வாறு செய்வது வழக்கம்.

இப்பொழுது எதையோ படித்து, அவர் சந்தோஷப்பட்டுக்கொண்டு இருந்தபொழுது அவருடைய தாயார் மறுபடியும் வந்து எட்டிப் பார்த்தாள். "அப்பா, அந்தப் பிள்ளை, சுந்தரம் வந்து காத்துக் கிட்டு இருக்குதுடா. வந்து அரைமணி நேரம் ஆவுது."

"அடடே! மேலே வரச்சொல்லக் கூடாது?—இல்லாத போனுல், நானே கீழே வறேன். தாகத்துக்கு ஏதாவது இருக்குதா, அம்மா?" என்று தாயாரை அவர் ரகசியமாய்க் கேட்டார்.

"இதுக்கு அவ்வளவு ரகசியம் என்ன?" என்று அவருடைய தாயார் மாணிக்கம்மாள் சிரித்தாள். "நானே சொன்னுல் அது கேக்கவில்லே. வெட்கப் படுது. நீ வந்தால்தான் சாப்பிடும்போல் இருக்குது. பாவம், மூஞ்சியெல்லாம் அம்மை வாரிக்கொட்டி யிருக்கிறது."

"ஆமாம், நல்ல பையன்; ஏதாவது சம்பாதிக் காட்டி காலம் தள்ள முடியாதூங்கிறுன். தங்கச்சி கலியாணம் வேறே. அவனுக்கு ஒரே கவலையாய்

இருக்குது. நல்ல பெண்ணம்மா. அவனைப் போலவே இருக்கும். குன்னத்தூர் பஞ்சாக்ஷர முதலியார் குடும்பத்தைச் சேர்ந்தவங்க. யாரோன்னு நினைச்சுடாதே.''

“அப்போ, நமக்கும் சொந்தமாய் இருப்பாங்களே. அந்தப் பெண்ணைத்தான் ஒரு வாட்டி அழைச்சிட்டு வரக் கூடாதோ?—இல்லாட்டி, நானேதான் போய்ப் பார்த்திட்டு வறேனே'' என்று அவர் தாயார் உற்சாகத்தோடு சொன்னபொழுது, முத்துக்கண்ணுக்குக் ‘குஷி' பிறந்தது. புருவங்களை உயர்த்திப் புன்முறுவலுடன், "அய்யோ, அம்மா!'' என்று குழந்தை போல், தம் தலையைத் தாயார் தலையில் மெதுவாக மோதினார். "ஆனால், அது உனக்குத் தகுந்த மருமகள் இல்லை, அம்மா!'' என்று சொன்னார்.

மாணிக்கம்மாளின் உற்சாகம் குன்றி, முகத்தில் விசனம் படர்ந்தது. “எனக்குத் தகுந்த மருமகள் பிறந்துகூட இருக்காளா?'' என்று சொல்லிக் கொண்டே கீழே போனாள்.

தன் ஆசிரியர் வந்ததும், சுந்தரம் சகஜமாக நடந்துகொண்டான். இட்ட காபி பலகாரங்களை ஏற்றுக்கொண்டான். முத்துக்கண்ணுவும் அந்தச் சிற்றுண்டியில் கலந்துகொண்டார். பிறகு வந்த விஷயத்தைக் குறித்து, முத்துக்கண்ணு அன்புடன் விசாரித்தார். சுந்தரம் தயங்கினான். அவருடைய தாயார்முன் சொல்லக் கூச்சப்படுவது போலக் காணப்பட்டது.

“எங்கம்மா இருக்காங்களேன்னு யோசிக்காதே, சுந்தரம். அவங்களுக்கு எல்லாம் தெரியும். உங்கள் ஊரைப் பார்க்கணுமின்னு ஆசைப் படறாங்க.

குன்னத்தூர் எங்கள் அம்மா பிறந்த ஊர் ஆக்கும்! அவங்கள் தாதா அங்கே இருந்த நல்ல நிலங்களை எல்லாம் வித்துத் தொலைச்சிட்டாராம். அப்புறம் எல்லாரும் இங்கே வந்து பட்டணம் அண்ணுத்தைங்கள் ஆனுங்களாம்.''

''அவன் எளக்காரத்தைப் பாரு, அப்பா!'' என்று மாணிக்கம்மாள் சுந்தரத்தைப் பார்த்துச் சொன்னுள்; ''எங்களவங்கள் யாரும் படிக்கவில்லையாம். அதுக்காகவாக்கும் அவன் அப்படிப் பேசறது! எங்கள் ஊருன்னுல் என்னுன்னு நினைச்சிட்டே நீ? தோட்டமும், துரவும்—செம்பரம்பாக்கம் ஏரியும் அதன் காவாயும், நெல் வயல்களும்—ஒரு தென்னந்தோப்பு விலை காணுது இந்த ஊர் மாளிகைகள்—''

''அப்படியானுல், உங்கள் ஊருக்கு, தாதா அவங்கள் ஊர் — பேரே இளநீர்ச்சாவடி!'' என்ருர் முத்துக்கண்ணு.

''இளநீர்ச்சாவடியா?—எனக்கு நல்லா நினைவு இருக்குது, அப்பா. ரோட்டு ஓரமே ஊரு. ஆனுல் ரொம்ப சின்ன கிராமம். தென்னந்தோப்புக்குப் பேர்போன இடமாச்சே. ஊரைச் சுத்திக் காவாய், அளவில்லாம மரங்கள். அந்தக் காலத்துலே வழிப் போக்கருக்குக் களைப்பாய் இளநீர் வெட்டிக் கொடுப்பாங்களாம்.''

''எல்லாம் கதை.''

''இல்லை, ஸார்—'' என்று சுந்தரம் பரிந்துகொண்டு வந்தான்.

''ஒகோ, நீங்கள் இரண்டு பேரும் ஒரு ஊர்க்காரங்கள் ஆயிட்டீங்களோ!— சரி, அந்த ஊரிலே

நிலமும் வீடும் வாங்கினால், உனக்கு இஷ்டந்தானே, அம்மா?—என்ன சுந்தரம், நீ வந்த விஷயம் அது தான்னு நினைக்கிறேன்?''

"ஆமாம்'' என்று சுந்தரம் குன்றியவாறு சொன்னான்.

"அதுக்கும் குன்னத்தூருக்கும் ஒரு மைல்கூட இருக்காதே. தங்கமான இடமாச்சுதே. நம்ம சொந்தக்காரங்கள் இன்னும் எத்தினியோ பேர் அங்கே இருக்காங்க, முத்து. யார் விக்கிறாங்க?''

"சுந்தரம்தான்.''

"சுந்தரமா? அய்யோ பாவம்! போயும் போயும் அதன் சொத்தை நாமா வலிச்சிக்கிறது? வேண்டாம், அப்பா.''

"நாம் வாங்காத போனால், வேறே யாருக்காவது வித்துடறான். நாம் வாங்கினாலாவது நூறு இருநூறு கூடக் கொடுக்கலாம். அவனுக்கு நல்ல காலம் வர்றபோது திருப்பி வாங்கிக்கிட்டுமே'' என்றார் முத்துக்கண்ணு.

"அது எல்லாம் வீண் பேச்சு. அந்தக் காலத்துலே எது எப்படி இருக்குமோ, யார் எப்படி இருப்பாங்களோ, என்ன சொல்ல முடியும்? என்னைக் கேட்டால், நான் விக்க வேண்டாமின்னுதான் சொல்லுவேன். இல்லே, யாருக்காவது வித்துதான் தீரணுமின்னால், அப்போ வேணுமின்னால் நீ வாங்கு.''

"விக்காமல் இருக்க முடியாதுங்க'' என்றான் சுந்தரம் வணக்கத்துடன். "3800 ரூபாய்க்கு விலே பேசி வச்சிருந்தேன். இப்போ எங்கள் முடையைக் கண்டுகொண்டு, 3500 தான் கொடுப்பேன் எங்கிறான்

ஒரு மார்வாடி. என் தங்கச்சிக்குக் கலியாணம் நிச்சயமாயிட்டுது. பணம் இருந்தால், அடுத்த வாரத்துலே கூட நடத்திடலாம். நல்ல இடமின்னு எல்லாரும் சொல்றுங்க. என் தங்கச்சிநல்லா இருந்தால் போதுங்க. நான் எப்படியோ பிழைச்சுக்கிறேன்" என்றான் சுந்தரம் தழுதழுத்த குரலில்.

"கலியாணத்துக்கு எவ்வளவு செலவு செய்யப் போறே, அப்பா?" என்று மாணிக்கம்மாள் கேட்டாள்.

"மூவாயிரமாவது வேணும். ஒரு வீடும் அதுக்குப் பின்னுலேயே இரண்டு காணி நிலமும் இருக்குதுங்க. ஊருக்கெல்லாம் நல்ல கழனியின்னு எல்லாரும் சொல்வாங்க. எங்க பெரியப்பாரு விக்கவே கூடாதின்னு மறிக்கிறார். நிலத்தை வித்தாலும் வீட்டை விக்கக் கூடாது, அப்படி வித்தாலும் தனக்குத்தான் கொடுக்கணுமின்னு சண்டை போடறார். அதன்மேலே 1500 கடன் வேறே இருக்குது. நான் எப்போ கடனைக் கட்டறது? எப்போ தங்கச்சி கலியாணத்தை முடிக்கிறது? எவ்வளவோ போயிட்டுதுங்க; இது இருந்து என்ன பண்ணப்போவது? கடன்காரன் தொந்தரவு நீங்கி, தங்கச்சி கலியாணமும் முடிஞ்சால், எனக்கு அதுக்குமேல் என்ன வேணுங்க?"

"நான் 4500-க்கு விலை கட்டி, கடனைத் தீர்த்து, அவன் கையிலே 3000-த்தைக் கொடுத்திடறதாகச் சொல்லிட்டேன், அம்மா. போகப்போக, விலை ஏறுமே தவிர, குறையாதுங்கறுங்க. ?ராட்டு ஓரமாய் ஒரு தென்னந்தோப்பு. தோப்புக்கு உள்ளே வீடு. வீட்டுக்குப் பின்னுலே கழனி. வெயில் காலத்துலே வெயிலே தெரியாது. கோடைக்கானல்தான். நம்ம வீட்டுலே

யிருந்து கணக்காய் 14 மைல்தான் கார் வாங்கிட்டோமானல், அரைமணி நேரத்துலே போய்ச் சேர்ந்துடலாம.—''

''நீ பாத்துட்டு வந்தயா?''

''சுந்தரம் சொன்னல் போதாதா?'' என்று முத்துக் கண்ணு சிரித்தார்.

''அய்யோ, பிள்ளை!''

''நீ பார்த்த பிறகு வாங்கலாம். உனக்குச் சம்மதம் இல்லாட்டி—''

''நான் பார்க்கத் தேவையில்லே. இளநீர்ச்சாவடி எனக்குத் தெரியாதா?—ஆனல் உங்கள் பெரியப்பார் ஏதோ வாணுமின்னு தடுக்கருர்னு சொன்னயே, வித்தப்புறம் மனவருத்தம் அதிகமாகப் போறது. அதையும் பாத்துக்கோ.''

''கழனியைப்பத்தி அவருக்கு ஒண்ணும் கவலை இல்லே. வீட்டு விஷயத்துலே அவருக்குக் கொஞ்சம் பயித்தியமுங்க. பயித்தியமின்னல் நிஜமாகவே பைத்தியம். அந்தக் காலத்துலே, எங்க வீட்டுக்கும் எங்கள் பெரியப்பார் வீட்டுக்கும் குறுக்கே சுவர் ஒண்ணும் கிடையாதுங்க. அப்புறம், இரண்டு பேருக்கும் ஏதோ மனவருத்தம் ஏற்பட்டு, எங்கப்பார் குறுக்கே சுவர் எடுத்தாராம். அது கோர்ட்டு வரையிலும் போய் எங்க பக்கம் தீர்ப்பாயிட்டுதாம். இரண்டு குடும்பத்துக்கும் ரொம்ப நாள் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்த தாம். இருந்தாப்போலே இருந்து சண்டை வந்திடு மாம். ஒருத்தருக்கொருத்தர் அடிச்சுக்கிட்டாங்க இன்னுகூட சொல்லுவாங்க. எங்கள் அம்மா, நாயிஞ இறந்த பிறகுதான், எங்கள் மேலே அவருக்கு இரக்கம்

வந்தது. அவருக்கும் ஒரே பிள்ளை, ஒரே பெண்ணு தானுங்க. எங்கள் குடும்பத்துக்கே அதுதான் வழக்க மின்னு சொல்லுவாங்க. அவர் பையன் என்னைவிட இரண்டு மூணு வயது பெரியவங்க.—இப்போ இருந் நால் எவ்வளவோ சகாயமாய் இருப்பான். எங்கள் அண்ணுத்தை ரொம்ப நல்லதுங்க. எங்க கும்பலெல் லாம் கொஞ்சம் கோவக்காரங்க. எங்க பெரியம்மா இருக்காங்களே, அவங்களைக் கோவிலுலே வச்சுக் கும்பிடணுங்க. அவ்வளவு நல்லவங்க—''

''இப்போ இருக்காங்க அல்ல?'' என்று மாணிக் கம்மாள் விசாரித்தாள்.

''இருக்காங்க. எங்கண்ணுத்தைதான் அநியாய மாய்ப் போயிட்டுது. கிருஷ்ணன் பிறப்பன்னு, நாலைஞ்சு பசங்களாய்ச் சேர்ந்துகிட்டு, நாகமரமேறி, பழம் பறிச்சாங்களாம். இது உச்சாணிக்குப் போயிட்டு தாம். அப்போ காத்துலே கிளை ஒடிஞ்சு, கீழே விழுந்து செத்துட்டுதாம். ரொம்ப கஷ்டப்பட்டுதாம். வயது பன்னிரண்டுகூட இருக்காதாம். அதோடே எங்க பெரிய நாயினவுக்கு மூளை கலங்கிப் போச்சு.''

''இப்போ அவங்களுக்கு இருக்கிறது அந்தகப் பெண்ணுதான்னு சொல்லு. என்ன வயது இருக்கும்?''

முத்துக்கண்ணு புன்முறுவல் பூத்தார்.

''பதினெட்டுக்குக் குறையாதுங்க. என் தங்கச் சியைவிட ஒரு வருஷம் பெரிது. ஆனல்—'' என்று வார்த்தையை விழுங்கினன்.

''என்ன, எடுத்ததுக்கெல்லாம் அப்படித் தயங் குறயே. என்ன சங்கதி? சும்மா சொல்லு, அப்பா'' என்று மாணிக்கம்மாள் அன்புடன் விசாரித்தாள்.

"அதுக்கு வேதவல்லியின்னு பேர். பார்த்தாலும் அப்படித்தான் இருக்குங்க. முகத்துலே பால் வடியும். அதன் குணமும் அழகும் எங்களவங்களுலே யாருக்கும் கிடையாது. எங்கள் பெரியம்மாளுக்குத் தகுந்த பெண் அது."

"ஊம்" என்று மாணிக்கம்மாள் பெருமூச்சு விட்டாள். "உன் தங்கச்சிக்கு என்ன குறைவு? உன்னைப் போல இருந்தால், தங்கமாட்டம் இருக்குமே. வேதவல்லி, அதைவிட நல்லா இருக்குமின்னுல்—"

"உடனே கலியாணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்" என்று முத்துக்கண்ணு சிரித்தார்.

"போதும், அப்பா, உன் சிரிப்பு. கத்த வித்தையெல்லாம் பெத்த தாயண்டைதானு?" என்று அவனுடைய தாயார் சினந்துகொண்டாள். தான் அநாவசியமாயும் அசட்டுத்தனமாயும் பேசிவிட்டதாகச் சுந்தரம் அஞ்சினுன்.

"நீ எப்படி பிழைக்கப்போறயோ, சுந்தரம். வந்த காரியத்தையல்ல முடிக்கணும்? உங்கள் ஊருலே நிலம் வீடு வாங்கிறதுலே எங்கம்மாவுக்குச் சந்தோஷந்தான். பார்க்கவேண்டியதில்லையின்னு சொல்லிட்டாங்க. அந்த சொத்துக்குச் சம்பந்தப்பட்ட ரிகார்டுகளைக் கொண்டுவா. எங்கள் வக்கிலண்டை கொடுத்து, கிரய பத்திரத்தைத் தயார் செய்யச் சொல்றேன். பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்து, பணத்தைக்கொண்டு போய், தங்கச்சி கலியாணத்தை முடி. ஒண்ணும் தெரியில்லையே. அட பயித்தியக்காரா!"

"ஆமாம், அது பயித்தியம், நான் பயித்தியம், எல்லாரும் பயித்தியம்.—நீ ஒருத்தன்தான் புத்திசாலி!

காலேஜுலே ப்ரொபஸர் ஆயிட்டால், உனக்கு எல்லாம் தெரிஞ்சிட்டுதின்னு நினைக்காதே!'' என்று அந்த அம்மாள் ஒரு போடு போட்டாள். ''அது இருக் கட்டும். உங்கள் பெரிய நாயினு வீட்டைத் தனக்குக் கொடுக்கணும்னு சண்டை போடுறாரிங்கறயே; வித்தப் புறம், எங்களை இமிசை பண்ணினுல் என்ன செய் யறது? போதும் போதாததுக்கு, பைத்தியமின்னு வேறு சொல்றே'' என்று சொல்லும்போதே, மாணிக் கம்மாளுக்கு, தன்னை அறியாமல் புன்சிரிப்பு வந்தது. முத்துக்கண்ணுவும் குஷி பிறந்து புருவங்களை உயர்த்தினுர்.

''பைத்தியமின்னுல், யாருக்கும் ஒரு தீங்கும் செய்ய மாட்டாருங்க. அவர் நாவுலே ஒரு துடுக்கான சொல் கூட வராதுங்க. ஒரு இமிசையும் செய்யமாட்டார். நீங்கள் பயப்படவே வேண்டாம். அவருக்கு எப்பவும் ஒரு நம்பிக்கை—ஊராரெல்லாங்கூட அப்படித்தான் சொல்றுங்க—எங்கள் முப்பாட்டனுர் காலத்துலே, எல்லாம் ஒரே மனையாய் இருக்கும்போது, தீவட்டிக் கொள்ளைக்காரங்களுக்குப் பயந்துகிட்டு, பணத்தைப் புதைச்சு வைச்சாங்களாம். அதை ஒரு முனிச்வரன் காத்திக்கிட்டு இருக்குதின்னு, எதேதோ கதையைச் சொல்லுவாங்க. ஒரு வாட்டி சுவர் எடுக்கிறபோது, ''கில் கில்'' இன்னும் சத்தம் கேட்டது போலேயும், யாருக்கும் தெரியாமல் அந்த வேலைக்காரன்கள் ராவுலே வந்து தோண்டி, ஒரு குடத்தை எடுக்கிறபோது, அது மறைந்துபோயிட்டாப்போலேயும், சுருண்டு கீழே விழுந்திட்டாப்போலேயும், அப்புறம் இரண்டு மூணு நாளுக்கெல்லாம் அவங்க ரத்த பேதியாலே செத்திட்

டாங்கள்னும், இப்படியெல்லாம் கதை சொல்வாங்க. அதுலே கொஞ்சம் உண்மை இருக்கலாம்னு தோணுது. யாருக்கு என்ன தெரியும்? சொல்லுங்க. கோர்ட்டு வரையிலும் போய் எங்கள் நாயினு பக்கம் 3 அடி தீர்ப்பு ஆச்சுதே, அதுலேதான் புதையல் ஆம்பிட்டுக் கிட்டு இருக்குதின்னு எங்கள் பெரிய நாயினுவி னுடைய அபிப்பிராயம். எங்கள் நாயினு சுவர் எடுத்த துலே, அவருக்கு ஆத்திரம் இன்னும் அதிகமாய்ப் போயிட்டுது."

"பக்காச் சுவரா?" என்று முத்துக்கண்ணு கேட்டார்.

"இல்லே, ஸார். வெறும் மண் சுவர். அதுவும் எல் லாம் இடிஞ்சிபோய், மூலேக்கு மூலே குட்டிச்சுவராய் நிக்கிது. வாங்கறவங்களுக்கு இந்த வம்பே வேண்டா மின்னு, ஒரு மாதத்துக்கு முந்தி நான் ஊருக்குப் போ யிருந்தபோது, அவருக்கு மூணு அடிக்கு அஞ்சு அடி யாய் அளந்துகொடுத்து,கல்லேயும் போட்டுக்கச் சொல் லிட்டேன். அதுலே அவருக்கு ரொம்ப சந்தோஷம். இனிமேல், என் வீட்டை என்ன செய்துகொண்டா லும் அவருக்கு அவசியமில்லே."

"மனே எவ்வளவு அகலம் இருக்கும்?" என்று மாணிக்கம்மாள் கேட்டாள்.

"ரொம்ப அகலமிங்க. மொத்தம் 350 அடி. இப்போ, நமக்கு 175 அடியிலே, 5 போனாலும், 170-க் குக் குறைவேயில்லே. நான் பத்திரத்துலே 170 அடி தான் எழுதப்போறேன்."

"அது கடக்குது. உங்கள் வீட்டுக்கும் உங்கள் பெரிய நாயினு வீட்டுக்கும் இடையிலே எவ்வளவு

தூரம் இருக்கும்?''

''120 அடிக்குக் குறைவில்லே. நீங்கள் அவரைப் பத்தி ஒண்ணும் கவலைப்படாதிங்க, அம்மா. அவர் யார் வழிக்கும் வரமாட்டார். அப்பவே, குறுக்குச் சுவரை எல்லாம் இடிச்சி நிரவிட்டு, நான் அஞ்சடி தள்ளிக் கொடுத்தேனே, அங்கே முள்வேலியைப் போட்டுட்டாராம். அவருக்கு வேண்டிய இடம் கிடைச்சுப் போயிட்டுது. இனி அவருக்கு ஒண்ணும் தேவையில்லே. யார் வீட்டுக்கு வந்தாலும், இந்தப் புதையல் பேச்சை எடுக்காமல் இருக்கமாட்டார். அப்போ, எங்கள் பெரியம்மாவுக்கும் தங்கச்சிக்கும் ரொம்ப கஷ்டமாயிருக்கும். சும்மா இருக்கச் சொன்னாலும் கேட்கமாட்டார். அதுவும், பிள்ளே செத்ததிலிருந்து, இந்தப் பயித்தியம் அதிகமாயிட்டுது. இது எல்லாம் உங்களுக்குத் தெரிந்தால்தானே, நாளைக்கு என் மேலே உங்களுக்கு ஒரு கெட்ட அபிப்பிராயம் இல்லாமல் இருக்கும்?'' என்றான் சுந்தரம்.

''ஆமாம், லட்ச லட்சமாய்ப் போட்டுடறோம். இதுக்கு இவ்வளவு யோசனை. உண்மையிலே, நீயும் கொஞ்சம் பயித்தியக்காரன்தான், சுந்தரம்!'' என்றார் முத்து பரிகாசமாய்.

''போதும். சும்மா இரு.—ஆமாம், சுந்தரம், நாம எப்போவாவது போனுல் வந்தால், அந்த வீடு தங்கறதுக்கு சௌகரியமாய் இருக்குமா?'' என்று மாணிக்கம்மாள் கேட்டாள்.

''பேஷாய்த் தங்கலாமுங்க. பழைய காலத்து ஓட்டு வில்லே வீடுதான். இருந்தாலும், அது எவ்வளவு காத்தோட்டமாய் இருக்குது தெரியுமா?—''

"உனக்கு ஏன், அம்மா, அந்தக் கவலை? அதை முதல் தரமான 'கண்டிரி ஹவுஸ்' ஆக்கிவிடறேன். நம்ப சிங்காரவேலண்டை சொன்னால், மூணே மாசத்துலே ஒரு மாளிகையைத் தயாராக்கிடுவான். சரி, இனிமேல் எனக்குப் பொழுதில்லை.—அடாடா! திருத்திறதுக்கு இன்னும் 180 பேபர் வேறே இருக்குதே. நாளைக்கு அனுப்பியாகணுமே! இதோ பார், சுந்தரம், நீ காரியத்தை முடிக்கிற வழியைக் கவனி. அம்மாவுக்குச் சம்மதந்தான். இந்தப் பரீக்ஷை சம்பந்தமான வேலை இன்னும் எனக்குப் பதினஞ்சு நாளுக்கு வாட்டி எடுத்துடும். அதுக்குள் பத்திரம் எழுதறது, ரிஜிஸ்தர் செய்யறது—எல்லாம் ஆவட்டும். அப்புறம் நாமெல்லாம், சிங்காரவேலு காரை எடுத்துக்கிட்டு, 'ஜம்'முனு போயி வரல்லாம்—என்ன?—அப்போ நான் வரேன்—" என்று சொல்லிக்கொண்டே எழுந்து போகும்பொழுது, தம் தாயார் சுந்தரத்தைக் கொல்லைப் புறம் அழைத்துக்கொண்டு போவதைப் பார்த்து, "என்ன அம்மா, அவனை நச்சித் தள்ளிடுவே போலிருக்குதே" என்றார்.

"அட, ஒண்ணும் இல்லையடா அப்பா! பலாப்பழம் இரண்டு மூணு பழுத்திருக்குது. அதுக்கு ஒண்ணு தரலாமின்னு—"

"சரி, கொடு, கொடு" என்று முத்துக்கண்ணு தம் அறைக்குச் சென்றார். மாணிக்கம்மாள், பலாப்பழச் சாக்கை வைத்துக்கொண்டு சுந்தரத்தை அநேக கேள்விகளைக் கேட்டாள்.

"நீ சொல்றதைப் பார்த்தால், சுந்தரம், முத்துக்கு வேதவல்லியைக் கலியாணம் பண்ணிட்டால் ரொம்ப

நல்லா இருக்கும் போலிருக்குதே. அவ்வளவு நல்ல குழந்தை எங்கள் வீட்டுக்கு வரணுமின்னு, அந்த முருகக்கடவுள் எல்லாத்தையும் தள்ளிவிட்டார் போலிருக்குது! எனக்கு இப்பொழுதே அந்தக் குழந்தையைப் பார்க்கணும் போலே இருக்குது, அப்பா! நீயும் கொஞ்சம் முத்துக்குச் சொல்லேன்."

"நான் எப்படிச் சொல்லறதுங்க?" என்று சுந்தரம் பயந்து தயங்கினன்.

"நிஜந்தான். சரி, போய்வா, அப்பா! அந்த முருகக் கடவுளைத்தான் நம்பியிருக்கேன்" என்றுள் கைகூப்பியவாறு.

3

சுந்தரத்தின் அவசரம் அவனுக்குத்தான் தெரியும். முத்துக்கண்ணு பதினைந்து தினங்கள் கெடு வைத்ததால், அவன் ஒரு வாரத்துக்குள்ளாகவே எல்லாக் காரியங்களையும் முடித்து, பணத்தைப் பெற்றுக் கொண்டு, பிறகு பத்துத் தினங்களுக்குள் தன் தங்கையின் கல்யாணத்தையும் நடத்திவிட்டான். கல்யாணத்துக்கு முத்துக்கண்ணும் அவன் தாயார் மாணிக்கம்மாளும் சென்று, மணமக்களுக்குத் தங்கள் அன்புக்கு அறிகுறியாக, நல்ல சம்மானத்தை அளித்தார்கள். இதன்பின் சுந்தரம் உத்தியோகம் சம்பாதிப்பதில் ஊக்கத்தோடு அலைந்தான். முத்துக்கண்ணுக்கு அவன் மற்றொரு வருஷம் படிக்கக்கூடாதா என்ற எண்ணம் இருந்துகொண்டேயிருந்தது. ஆனல் அவன் படும் கஷ்டத்தைப் பார்த்து, தமக்குச் சிநேகிதர் ஒருவர் நடத்தும் பெரிய அயல்நாட்டு வியாபாரத்தில், அவனை உத

விக்காக வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தார். தற் சமயம் கிடைக்கும் மாத வருமானத்தை மாத்திரம் முத்துக்கண்ணு கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. பிற்காலத்தில், சுந்தரத்துக்கும் வியாபாரத்தில் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடிய சமயம் வரும் என்று அவர் நம்பினார்.

விளையாட்டுப் போல், முத்துக்கண்ணு இளநீர்ச் சாவடியில் வீடு, நிலம் வாங்கி இரண்டு மாதங்கள் ஆகி விட்டபோதிலும், அவருக்கு அதைப் போய்ப் பார்க்கச் சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தது. சுந்தரம் வேலையில் அமர்ந்துவிட்டபோதிலும் கூப்பிட்டபொழுது வரத் தயாராயிருந்தான். ஆதலால், பிசகெல்லாம் முத்துக் கண்ணின் மீதுதான் இருந்தது. இதனால், அவர் வேண்டுமென்று வம்பு செய்துகொண்டிருந்தாலும் இருக்கலாம் என்று, அவருடைய தாயார் சந்தேகித்து, மிக வருத்தப்பட்டாள். ஆனால், உண்மையில் அப்படி இல்லை.

இந்தச் சமயத்தில், முத்துக்கண்ணின் தமக்கை இரண்டு மூன்று தினங்களில் புறப்பட்டு வருவதாகக் கடிதம் எழுதினாள்.

"அக்காவுக்காகத்தான், நம்ப போறது நின்னிட்டுது, அம்மா! அதுவும் தென்னந்தோப்பையெல்லாம் பார்த்து சந்தோஷப்படும் இல்லையா? இந்த ஞாயித்துக் கிழமை, கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதிச் சாலும், போய்தான் தீர்றது.—என்னுங்கறே?"

"இந்த மாதிரி பிள்ளையைப் பெத்திட்டு, நான் என்னத்தைச்சொல்லுவேன்?" என்றாள் அவனுடைய தாயார். அவளால் புன்சிரிப்பை மறைக்க முடிய

வில்லை. பிறகு ஏதோ நினைவு வந்ததுபோல், "ஆமாம் அப்பா, இதுவும் ஒரு நல்லதுக்குத்தான். மாப்பிள்ளை ஏன் வரவில்லையாம்?" என்றாள்.

"சர்க்கார் உத்தியோகமின்னால், நீ என்னான்னு நினைச்சே? கேட்டபோது லீவு கொடுத்திடுவாங்களா? அக்காவாவது வருதேன்னு சந்தோஷப்படு" என்றார் முத்துக்கண்ணு.

முத்துக்கண்ணின் தமக்கை கற்பகவல்லி, பள்ளியில் வாசித்துக்கொண்டிருந்த இருவரை ஊரில் விட்டுவிட்டு, 'நண்டும் வண்டு'மான மூன்று குழந்தைகளை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். அக்காவும் தம்பியும் முகவெட்டிலிருந்து அநேக விஷயங்களில் ஒத்திருந்தார்கள். முதலில், தன் தம்பி இளநீர்ச்சாவடியில் வீடு, நிலம் வாங்கியதைக் குறித்துக் கற்பகவல்லி பூரித்துப் போகவில்லை. ஆனால், தன் தாயார் ரகசியமாகச் சில விஷயங்களைச் சொன்னதன் பேரில், அவளுக்கும் அதில் உற்சாகம் ஏற்பட்டது. ஆகவே, ஞாயிற்றுக்கிழமையன்று மோட்டார் வண்டியில் இளநீர்ச்சாவடிக்குப் புறப்பட்டபொழுது, முத்துக்கண்ணின் குடும்பத்தாருக்கு, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் ஆனந்தம் உண்டாயிற்று. மோட்டார் ஓட்டுபவனின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சுந்தரம், "ஸார், மணியைப் பாருங்கள்" என்று முத்துக்கண்ணுவைக் கேட்டுக்கொண்டான்.

"3-25 ஆகுது. என்ன சங்கதி?"

"ஒண்ணுமில்லை. நாம் போய்ச் சேருவதுக்கு எவ்வளவு நேரம் ஆகுதுன்னு உங்களுக்குத் தெரியணுமல்லவா?"

"ஆமாம், கூடப் பத்து நிமிஷம் ஆனால்தான் ஆவட்டுமே. அங்கே என்ன மிஞ்சிப் போவுது?— அப்பா, டிரைவர், நீ ஒரே சீராய்ப் போ."

"ஆவட்டுங்க. எப்படிப் போனாலும் அரை மணிக்குமேலே ஆகாதுங்க. அந்த ஊர்ப்பக்கம் எத் தினியோ வாட்டி போயிருக்கேன்" என்றான் மோட் டார் ஓட்டுபவன்.

நகரத்து எல்லைகளைத் தாண்டியதும், சுற்றுப்புற மெல்லாம் ஒரே தோட்டமும் துரவுமாயிருந்ததைக் கண்டு, கற்பகவல்லி ஆனந்தித்து, "நிஜமாகவே, தம்பி, அம்மா ஊர் நல்லாதான் இருக்கும் போலிருக்கு. இங் கேயே இருந்திடலாமின்னு தோணுதே. இத்தினி நாள் ஏன் உனக்கு அந்த யோசனை வரல்லே?" என்றாள்.

"எதுக்கும் நல்ல காலம் வரவேண்டாமா? இது கிடக்குது.—அதோ, ஏரிக்காவாயைப் பார்த்தியா? எவ் வளவு தூரத்துக்குப் பாயுது தெரியுமா? பச்சைப் பசே லின்னு, இதைப் பாத்தாலே, பிடிச்ச பாவம் போகுமே. இந்தக் கழனிங்களுலே நெல் விளையாட்டி எல்லாருக் கும் சாப்பாடு எங்கிருந்து வரும்?—" என்று அவ ளுடைய தாயார் சொல்லிக்கொண்டிருந்தபொழுதே, சுந்தரம் வண்டியை மெதுவாக நடத்தச் சொல்லி, தன் ஆசிரியரை மணி பார்க்கச் சொன்னான்.

"3-50. 25 நிமிஷந்தான் ஆவுது. இப்பவே வந் திட்டமா என்ன?"

"இடது கைப்பக்கம் இருக்கிற தோப்புதான், ஸார்."

"பலே! இவ்வளவு மெள்ள வந்தும் 25 நிமிஷந் தான் ஆவுதுன்னால், நான் என் காரை ஓட்டறபோது

20 நிமிஷத்துலேயே வந்துவிடுவேனே. பேஷ்! இப்போ இந்த ரோட்டுலே திருப்பணும்னு சொல்லு."

"ஆமாம்; ஆனுல், இது சர்க்கார் ரோடு இல்லே. அந்தக் காலத்துலே பெரியவங்களாய்ச் செய்த வழி. இது முனிஸிபாலிடியா? ஒரு யூனியன்கூட இல்லே."

"பலே, அப்படித்தான் இருக்கணும். என்ன டிரைவர், யோசிக்கறே? இந்த மணலுலே வண்டி போவாதின்னுல் இறங்கிடறேம்."

"போகும். கொஞ்சம் கஸ்டமாயிருக்கும். பளு வில்லாட்டி சுளுவாய்ப் போயிடும். டையர் ரொம்பப் பழசிங்க" என்று அவன் இழுத்தான்.

"வாணும், அப்பா, நாங்கள் இறங்கி ஜோராய் நடந்து வரேம். சிங்காரவேலு ஒண்ணும் சொல்ல மாட்டான். ஆனுல், நாங்கள் திரும்பிப் போறதுக்கு கார் ஒழுங்காயிருக்கணுமே.—என்ன சுந்தரம், இன்னும் இரண்டு பர்லாங்குக்குமேலே இருக்காதே?"

"நூறு கஜங்கூட இல்லே, ஸார். இந்தத் தோப்பெல்லாம் எங்களுதே" என்று சுந்தரம் முதலில் இறங்கினுன். பிறகு மற்றவர்களும் மெதுவாக இறங்கினுர்கள். அதே சமயத்தில், கலகலவென்று சிரித்துக்கொண்டு, அந்தத் தோட்டத்தில் பாதை ஓரமாக இருந்த ஒரு வைக்கோல் போரின் பின்புறத்திலிருந்து சுமார் 17, 18 வயதுள்ள ஒரு பெண் ஓடி வந்தாள். வந்த வேகத்தில், சுந்தரம் முதலானேரை அவள் பார்க்கவில்லை. ஆனுல் அவர்கள் அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. வாய்விட்டுச் சிரிக்காவிட்டாலும், அவளுடைய சிரிப்பு அவர்களுடைய முகங்களிலும் உல்லாசத்தை உண்டாக்

ஒயது. நல்ல சிவப்புத் தந்தத்தில் செதுக்கி வைத்தாற் போல் பற்கள். கண்களில் குறும்புத்தனமும் விளை யாட்டுப் புத்தியும் போட்டி போட்டுக்கொண் டிருந் தன. எல்லாம் ஒரு விநாடிதான். அடுத்த க்ஷணத் தில் அவளும் அவர்கள் இருப்பதைத் தெரிந்து கொண்டாள். நாணத்தால் தலை குனிந்து, அவள் எப்படிப் போவது என்று யோசித்துக்கொண் டிருந்த பொழுது, சுந்தரம், "நாயினு வீட்டுலே இருக்காரா, அம்மா?" என்று கேட்டான்.

"இருக்குது, அண்ணுத்தே!" அவள் வணக்க மாய்ப் பதில் அளித்தாள். இதற்குள், "உன்னைக் கண்டுபிடிக்க முடியாதின்னு பார்த்தியா?" என்று அவளுக்கு ஏறக்குறையச் சமவயதான மற்ருெரு பெண் அவளைத் தேடிக்கொண்டு வந்து சேர்ந்தாள்.

"சும்மா இரு!" என்று அவள் ரகசியமாய் எச் சரிக்கை செய்ததன் பேரில், வந்தவள் மௌனமாய் அனைவரையும் பார்வையிட்டாள். பிறகு, அங்கே தாமதிக்க இஷ்டமில்லாதவள்போல், முதலில் வந்த பெண், "நான் போய் வறேன், அண்ணுத்தே" என்று தன் தோழியை அழைத்துக்கொண்டு சரேலென்று போய்விட்டாள்.

"இதுதான் எங்கள் பெரிய நாயினு மகள், வேத வல்லி" என்ருன் சுந்தரம், மாணிக்கம்மாளைப் பார்த்து.

"நீ சொல்லத் தேவையில்லை" என்ருள் கற்பக வல்லி.

"அப்பா, சுந்தரம், நீ சொன்னதுலே எள்ளளவும் பிசகில்லை. நான் நினைச்சுதுக்குமேலே பத்துப் பங்கு அதிகமாய் இருக்குதே தவிர, குறைவில்லை" என்ருள்

மாணிக்கம்மாள், வெகு சந்தோஷத்தோடு.

"இரண்டாவது வந்த பெண் யார்?" என்று முத்துக்கண்ணு கேட்டது, தாமும் ஏதாவது பேச வேண்டுமென்பதற்காக, விசாரிப்பதுபோல் இருந்தது.

"அது ஆறுமுக முதலியார் மகள். அவரும் எங்களுக்குச் சொந்தந்தான்" என்ருன் சுந்தரம்.

ஆனல், யாரால் தன் தம்பியின் முகத்துக்குச் சிறிது அசட்டுத்தனம் ஏற்பட்டதென்பதை, கற்பக வல்லி கண்டு கொள்ளாமல் போகவில்லை. அதைக் குறித்து உள்ளூறச் சந்தோஷப் பட்டபோதிலும், தன் தாயைப்போல் அவள் அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை.

சுந்தரம் முதலில் வீட்டைத் திறந்து அவர்களுக்கு ஒவ்வோர் இடமாகக் காட்டினன். இப்பொழுது, அவனுடைய பெரிய தகப்பனர் வஜ்ஜிரவேல் முதலியாரும் வந்து கலந்துகொண்டார். அறிமுகமானதும், அவர் எல்லாரிடமும் வெகு சகஜமாக நடந்து கொண்டார். பழைய காலத்து மனிதர். வயது கிட்டத்தட்ட அறுபது இருக்கும். தமக்கு அந்தக் காலத்தில் படிப்புச் சொல்லிக் கொடுக்காத குறையை அவரே சொல்லிக்கொண்டார்.

"நாங்களும் எங்கள் காலத்தைத் தள்ளிட்டோம். அம்மாத்தம் குழந்தைங்களாய் இருக்கும் போதே, எங்கள் பாட்டனர் எங்களுக்கு தேவாரம் திருவாசகம் எல்லாம் வாய்ப்பாட்டாகவே சொல்லிவச்சிட்டார். அவருக்கு இங்கிலீஷ் படிப்பின்னல் ஒரே வெறுப்பு. மாசிலாமணி முதலியார் பிள்ளைங்களைப் பட்டணத்துக்குப் படிக்க அனுப்பும்போது, என்னை

யும் என் தம்பியையுங்கூட [illegible] ங்கள் அம்மா எவ்வளவோ ச[illegible]ட்டுதாம். ஆனால் கிழவனார் கேட்கவில்லே. 'அந்தக் கோண எழுத்துப் படிப்பு வேண்டியதில்லே. நமக்கு என்ன சொத்து இல்லேயா, சுதந்திரம் இல்லேயா?' ன்னு ஒரே அடியாய் அடிச்சிட்டாராம். மாசிலாமணி முதலியார் மகன் அமிருதலிங்க முதலியார் பெரிய உத்தியோகத்துலே இருந்தாரே, தெரியாது உங்களுக்கு?—ஆயிரம் ஆயிரமாய் சம்பாதனை செய்தார். ஆனால் ஒண்ணும் மிஞ்சல்லேயிங்க'' என்று பெரியவர் கையை விரித்தார்.

''உத்தியோகத்துலே என்ன மிஞ்சுங்க? எதுவும் மேழிச்செல்வத்துக்கு ஈடாகாதுங்க. இந்தத் தோட்டம், கழனி இதுங்களேப் பார்த்துக்கிட்டு இருந்தாலே போதுமே. எனக்குக்கூட இங்கேயே இருந்திடலாம்னு தோணுதே.''

''நிலபுலம் வாங்கினப்புறம் இருக்காதெ முடியுங்களா? அதுலே ஒண்ணு: முன்னே போட்டு பின்னே எடுக்கணும். முந்தி செலவழிக்கப் பால் மாறினமோ, எல்லாம் வீணாப் போயிடும்.''

''சரிதான்'' என்று முத்துக்கண்ணு தலையை அசைத்த, ''என்ன, சுந்தரம், கழனி எங்கே இருக்குது?—ரொம்ப தொலவா?'' என்றார்.

''இதோ இருக்குதுங்க. அந்தக் கிணத்துக்கு அப்பாலே இருக்கிறதுதான். பெரியவங்களெல்லாம் ரொம்ப சௌகரியமாய்தான் செஞ்சுவச்சாங்க'' என்று பெரியவர் அடக்க முடியாத துயரத்தோடு சொன்னார்.

''என்ன, அம்மா, எல்லாம் பார்த்தாயிட்டுது அல்ல? சுந்தரம் சொன்னாப்போலேதானே இருக்

குது?" என்று முத்துக்கண்ணு புன்சிரிப்புடன் தாயாரைக் கேட்டார்.

"அதுக்குமேலேயே இருக்குது, அப்பா. நீ பிளான் போட்டதுபோல, இந்த வீட்டைக் கட்டவேண்டியது தான். நான் இனி இங்கேயேதான் இருக்கப்போறேன். --கழனி எதுவரையிலும் இருக்குது?" என்று மாணிக்கம்மாள் சுந்தரத்தைக் கேட்டாள்.

"அதோ, அந்த நொச்சிவேலி தெரியுதுங்களே, அதுவரையிலும்" என்று வஜ்ஜிரவேல் முதலியார் முன்வந்து பதில் சொன்னார்.

இதற்குள், அவர்கள் வீட்டுவாசலில் நின்று கொண்டிருந்த சுந்தரத்தினுடைய பெரிய தாயார் அவனை அழைத்து ஏதோ சொன்னாள். சுந்தரம் விரைவில் வந்து, "எங்கள் பெரியம்மா உங்களை எல்லாரையும் வீட்டுக்கு வரும்படி அழைக்கிறாங்க" என்றான்.

"நீங்கள் வேண்டாமின்னாலும், நாங்கள் நிக்கப் போறதில்லை" என்று கற்பகம் சிரித்த முகத்தோடு, சுந்தரத்தின் பெரியம்மா அகிலாண்டம்மாளைப் பார்த்துச் சொல்லிக்கொண்டே முந்தி சென்றாள்.

"அப்படித்தானே, அம்மா, இருக்கணும்? எல்லாம் விசாரிக்கப்போனால், ரொம்ப கிட்டவே வந்துட்டீங்க. —வாங்க" என்று அன்புடன் அகிலாண்டம்மாள் எல்லாரையும் பொதுவாக வரவேற்றாள்.

ஸ்திரீகளும் குழந்தைகளும் உள்ளே நுழைந்தனர். சுந்தரம் உள்ளே சென்று ஒரு பெரிய பாயைக் கொண்டுவந்து, விசாலமாயிருந்த வீதித்திண்ணையில் விரித்தான். மூவரும் உட்கார்ந்ததுதான் தாமதம், வஜஜிரவேல் முதலியார் முத்துக்கண்ணினிடம் தமது

புதையல் கதையை ஆரம்பித்துவிட்டார். முத்துக் கண்ணு பொறுமையுடன், வாய்திறவாமல் அனைத் தையும் கேட்டுக்கொண்டு வந்தார்.

''படிக்காமல் போனது, ஒரு குறை, குறை தானுங்க'' என்று வஜ்ஜிரவேல் முதலியார் நொந்து கொண்டு, முத்துக்கண்ணைக் கேட்டார்: ''ஆமாமுங்க, நீங்கள் நாலும் தெரிஞ்சவங்களாச்சே, புதைச்சு வச்ச பணம் ரொம்ப நாள்பட்டுப் போனால், கரியாய்ப் போயி டுமிங்கருங்களே, அது மெய்தானா?'' என்றார்.

''அப்படிப் போகிறதும் உண்டு. கொஞ்சம் கரி யாய், கொஞ்சம் நல்லா இருக்கிறதும் உண்டு. எவ் வளவோ தினுசுங்க'' என்று முத்துக்கண்ணு சொல்லி வைத்தார்.

''ஆமாங்க, ஆமாங்க. எல்லாத்துக்கும் அதிருஷ்டம் வேணுங்க. அது எனக்கு மட்டும் தெரியாதா? பிறந்த தெல்லாம் பிள்ளை ஆயிடுதா? நட்டதெல்லாம் மரம் ஆயிடுதா? அது கிடைக்கணுமின்னு இருந்தால்தான் கிடைக்கும்.--ஆனால், ஒண்ணு நிச்சயமுங்க. எங்கள் வீட்டுலே புதையல் இருக்கத்தான் இருக்குது'' என்று அவர் உறுதியாகச் சொன்னார்.

இப்பொழுது உட்புறமாக வாசற்புறத்து அறைக்கு ஏதோ சாமான் எடுக்கவந்த வேதவல்லிக்கு இந்தச் சம்பாஷணை காதில் விழுந்தது; முகத்தைச் சுளித்துக்கொண்டு தன் தாயாரிடம் சென்று முறை யிட்டாள்: ''வந்தவங்களண்டையெல்லாம் புதையல் பேச்சு எடுக்கக்கூடாதின்னிட்டு, நீ நயினாவைக் கண் டிக்க மாட்டேங்கறே. வந்தவங்கள் என்ன நினைப் பாங்க?''

கற்பகம் புன்முறுவலை அடக்க முடியாமல், "என் தம்பிக்கு அவர் சங்கதி நல்லாத் தெரியும். அவன் வேறு விதமாய் எண்ணிக்கமாட்டான். நீ கவலைப்படாதே" என்றாள்.

அகிலாண்டம்மாளும் தன் மகளுக்குச் சமாதானம் சொன்னாள். "அவர் பேசிக்கிறதுலே யாருக்கு என்ன கஷ்டம், வேதம்?—அவர் மனசுலே ஒரு பெரிய கஷ்டம் ஏற்பட்டுப்போயிட்டுதுங்க. இப்படி எதை யாவது ஒண்ணைப் பேசித்தானே அவர் அதைப் போக்கடிச்சுக்கணும்?" என்று மாணிக்கம்மாளிடம் அவள் சொன்னாள்.

"நிஜந்தானுங்க. இல்லாட்டி, அது எப்படி ஆறும்?"

"அவர் செய்யற வேலை ஒவ்வொண்ணுக்கும் சிரிக்கிறதா, அழுவுறதா - எனக்குத் தெரியில்லை. யாருக்கும் தெரியாமே அந்த ஓரத்துலே ஒரு பெரிய குழியைத் தோண்டிட்டாரு. எல்லாம் ஒரு ராவுலே. நீங்கள் பார்த்தால் நம்பமாட்டீங்க. காலையிலே, ஊட்டிட்டு குதிச்சுக்கிட்டு இருந்த எருமை கன்னுக்குட்டி அதுலே விழுந்திட்டது! அதை வெளியிலே எடுக்கிறதுக்குள்ளே, எங்களுக்குப் போதும் போதுமின்னு ஆயிட்டுது." கற்பகத்தால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"இதோடு போயிட்டுதீங்கிறீங்களா? இந்த ஊரிலே எங்களுக்குச் சொந்தக்காரன் ஒரு படுபாவி இருக்கான். அவன் பண்ணுற அக்கிரமம், அவன் எந்த கதிக்குதான் போவானோ! எங்கள் மேலே அவனுக்கு ஒரு வருத்தம். அதை அப்புறம் சொல்றேன். அதை

மனசுலே வச்சிக்கிட்டு, புதையல் கிடைச்சுதுன்னு போலீசுலே போய்ச் சொல்லிட்டான். அதுக்காக நாங்கள் பட்ட கஷ்டம் கடவுளுக்குத்தான் தெரியும்!'' என்று அகிலாண்டம்மாள் வருத்தப்பட்டாள்.

''அது யாரம்மா அந்தப் புண்ணியவான்! சொந்தக்காரனாய் இருந்துகூடவா அப்படிச் செய்தான்?'' என்றாள் மாணிக்கம்மாள்.

''என்ன சொந்தம்? அவன் சொல்லிக்கிறானுங்க. அவனை அடக்க இந்த ஊராருக்குக் கையாலே ஆவில்லே'' என்று வேதவல்லி முணுமுணுத்தாள்.

''எதுக்கும் துணிஞ்சவனுங்க. அப்படிப்பட்டவனோடு நாம் என்ன செய்ய முடியும்? சொல்லுங்க. கண்டால், பேசறதெல்லாம் ரொம்ப மரியாதையாய்த்தான் இருக்கும். மாமாதான், அத்தைதான். எங்கள் மேலே அவன் பகை வைக்கிறதுக்கு, ஒரு காரணம் இருக்குது—''

''ஆமாம், இருக்குது! சும்மா இரு, அம்மா! நீயும் நாயினாவுக்கு மேலே ஆயிட்டே!'' என்று வேதவல்லி சலித்துக்கொண்டாள்.

''இவங்கள் யாரின்னு நீ நினைக்கிறே?—வேத்து மனிஷாள் இல்லே, அம்மா!'' என்று, அகிலாண்டம்மாள் மேலே வாய் எடுப்பதற்குமுன் விர்ரென்று வேதம் சமையல் அறைக்குள் நுழைந்தாள். ''கோவத்தைப் பாருங்க!'' என்று அகிலாண்டம்மாள் சந்தோஷப்பட்டுக்கொண்டு மேலே சொன்னாள்: ''ரொம்ப ஏழைப்பட்டவனுங்க. அந்தக் காலத்துலே அவன் தாயார் எங்கள் வீட்டுலே வேலே செஞ்சு பிழைச்சுதாம். நம்ப ஜாதிதான்னு வச்சிக்கொள்ளுங்க. இருந்தாலும் அவ

னைப்போல துன்மார்க்கன் இந்த உலகத்துலேயே இருக்கமாட்டாள். என்ன என்னமோ பித்தலாட்டம் செய்து, முப்பது நாப்பதுனுயிரம் சம்பாதிச்சிட்டா னுங்க! பதினஞ்சு வருஷத்துக்கு முந்தி, 12 ரூபாய்க்கு செட்டி கடையிலே வேலைக்கு அமர்ந்தவனுங்க அவன். இப்போ, அவன் பேச்சும், நடையும்—அவ னுக்குப் பின்னுலே இரண்டு பேர்—இவ்வளவுக்கும் 4, 5 கிளாஸ்கூட படிச்சிருக்கமாட்டானுங்க. இப்போ வேதவல்லியைக் கட்டிக்கணுமின்னு ஒரே பிடிவாத மாய் இருக்கானுங்க. அவன் துணிச்சலைப் பாருங்க! இருபதினுயிரம் ரூபாய் சொத்து அவன் பேராலே எழுதிவைக்கிறேனுங்கருன். சுந்தரம் வீடு வித்துட் டது அவனுக்கு இன்னும் தெரியாது. அதுக்கு வேறு என்னு வம்பு செய்யப் போருனே!—அந்த வீட்டையும் வாங்கி எங்களுக்குக் கொடுத்திடறதாகச் சொல்லிக் கிட்டு இருக்கான்.— அவனுக்குதான் எங்க வீட்டுக் காரர் சங்கதியெல்லாம் நல்லாத் தெரியுமே!

"இதுக்குவேதவல்லி என்னு சொல்லுது?" என்று கற்பகம் கேட்டாள்.

"அதை நீ கேட்கணுமா, அம்மா? – அண்ணுத்தை மரத்து மேலேயிருந்து கீழே விழுந்து இறந்துட்டுது. நான் மரத்துலே தூக்குப் போட்டுக் கிட்டு சாகறேன் இங்குது!"

"உங்கள் அபிப்பிராயம்?" என்று கற்பகம் நாஸுக்காகக் கேட்டாள்.

"உனக்கு ஏன் அம்மா, அந்த சந்தேகம்? ஏரியிலே, அவளையும் தள்ளி, நானும் விழுந்திடுவேன்!"

"அய்யய்யோ! இதெல்லாம் என்னு பேச்சுங்க!"

என்றுள் மாணிக்கம்மாள் நடுக்கத்துடன்.

"நீங்கள் என்னுங்க! - அந்தத் துடைப்பக்கட்டைக்கு அப்படி பயப்படறீங்க. , அவனுக்குத் தாத்தாவா யிருந்த ரவுடிங்கள் எல்லாம் ஒரு நாளுலே இருக்கிற இடம் தெரியாதே போயிட்டாங்க. அது யாருங்க அவன்? அவனைப் பார்க்கணும்போலே இருக்குதே."

"என் மாப்பிள்ளை போலீஸிலே டிபுடி ஸுபரண்டாய் இருக்காருங்க. என்னைவிட என் குழந்தைகள் ரொம்ப தைரியம். அதுவும் இவள் போலீஸ் அதிகாரியின் பெண்ஜாதியான பிறகு, கேட்கவேண்டியதில்லை" என்று மாணிக்கம்மாள் பெருமையுடன் சொல்லிக்கொண்டாள்.

"போலீஸ் அதிகாரிகளின்னுல் பேயுங்களா? - அக்கிரமம் செய்யறவங்களை அடக்காட்டி, அவங்கள் எதுக்காக உத்தியோகம் பார்க்கிறது? இன்னும் இரண்டு மாதத்துக்கெல்லாம், செங்கல்பட்டுக்கே ஸுபரிண்டெண்டாய் வந்துடப்போருர். அப்போ அவன் சங்கதியெல்லாம் மெய்யின்னு கண்டுகிட்டாரோ, ஒரே நாளுலே அவனை உள்ளே அனுப்பிச்சுடுவார்" என்று கற்பகம் சொல்லிக்கொண்டாள்.

"ஐயோ, அவன் சங்கதி உனக்குத் தெரியாதம்மா. அவன் செஞ்சது ஒவ்வொண்ணை நினைச்சால்-!"

"நீங்க என்னுங்க, காலணுப் பொருத கழுதைக்காக அப்படிபயப் படறீங்க? - சரி, வேதம் இந்நேரம் உள்ளே என்ன செய்யுது?" என்று சொல்லிக்கொண்டே கற்பகம் வேதவல்லியினிடத்துக்குச் சென்ருள்.

வேதம் செய்யும் ஏற்பாடுகளைப் பார்த்து அவள் வியந்தாள்.

“அடே... அப்பா! பெரிய விருந்தாய் இருக்குதே. ரொம்ப வேலை செய்திருக்கயே. - யாருக்காவது கலியாணமா?” என்று கற்பகம் தமாஷாகக் கேட்டாள்.

வேதவல்லிக்கு முகம் சிவந்துவிட்டது. பிறகு சமாளித்துக்கொண்டு, “எல்லாம் வீட்டுலே இருந்ததுதானுங்க” என்று அவள் சொல்லிக்கொண்டிருந்த போதே, கற்பகம் ஒரு வேர்க்கடலை உருண்டையை உடைத்து வாயில் போட்டுக்கொண்டாள்.

“ரொம்ப ருசியாய் இருக்குதே! பட்டணத்துலே துட்டு செலவு செய்தால் கடையிலே லட்டு ஹல்வா எல்லாம் கிடைக்கும். நல்லாப் பாகு பிடிச்சு, இந்த மாதிரி வேர்க்கடலை உருண்டை யார் வச்சிருப்பாங்க?”

“ஆமாம், கேலி பண்ணுங்க.”

“அய்யய்யோ! உண்மையாய்ச் சொல்றேன், வேதம்.”

இதற்குள் அவளுடைய குழந்தைகளும் உள்ளே நுழைந்து, ஆளுக்கு ஓர் உருண்டையை எடுத்துக் கொண்டார்கள்.

“அடே! அடே! உடம்புக்கு ஆவாதுடா!” என்று கற்பகம் குழந்தைகளை அழைத்துக்கொண்டு கூடத்துக்கு வந்தாள். “இந்தப் பசங்களை உள்ளே விடாதே, அம்மா!” என்று அவர்களைத் தன் தாயாரிடம் ஒப்பித்துவிட்டு, வாசலுக்குச் சென்று, சுந்தரம் முதலியோரைப் பலகாரத்துக்கு அழைத்தாள்.

முத்துக்கண்ணு சிரித்தார்.

“என்ன அக்கா, இரண்டு மணிக்குதானே டிபன்

செய்துவிட்டு வந்தோம்? அதுக்குள்ளே என்ன, கோணியிலே போட்டு அடைக்கிறதா? என்னுங்க, எங்கள் அக்கா இங்கே ஒரு நாள் இருந்தால் போதும், நீங்கள் எல்லாம் அது சொன்னபடி கேழ்க்க வேண்டியதுதான்."

"அப்படித்தானே இருக்கணுங்க?" என்றாள் வேதவல்லியின் தாயார் அகிலாண்டம்மாள்.

அங்கே ஒரு நாற்காலியும் மேஜையுமே இருந்ததால், சுந்தரம் மணைகளைக் கொண்டுவந்து தங்கள் மூவருக்கும் போட்டுக்கொண்டான். வேதவல்லி முதலில் மறுத்து உள்ளே ஓடி ஒளிந்துகொண்ட போதிலும், கற்பகம் அவளையே மெள்ளத் தட்டிக் கொடுத்துப் பரிமாறும்படி செய்தாள். பிறகு தானும் குறுக்கும் நெடுக்குமாக அதிக வேலை செய்பவள் போல் நடந்தாள்.

"அக்கா, இப்போ என்ன வேலை செய்யறபடி உனக்கு எண்ணம்?" என்றார் முத்துக்கண்ணு.

"ஒரு வேலையாய் இருந்தால் அல்ல சொல்லு வேன்?"

எல்லாருக்கும் சிரிப்பு வந்தது.

"அப்படிப் போடு.—நாயினு உன்னையும் ஒரு பி. ஏ. ஆக்காதபோனதும் ஒரு பிசகுதான்."

"என் சங்கதி இருக்கட்டும். வேதத்துப் படிப்பைக் கெடுத்திட்டாங்களேன்னிட்டு எனக்கு வருத்தமாய் இருக்குது. அஞ்சாவது வரையிலும் படிச்சுதாம். அப்புறம் நிறுத்திட்டாங்களாம். தமிழுலே தானே விருத்தி அடைஞ்சது ஒண்ணும் ஆச்சரியமல்ல.— ஆனல், எப்படி அது இங்கிலீஷுலே இவ்வளவு

பயிற்சி அடைஞ்சதின்னு எனக்கு நம்ப முடியாமல் இருக்குது. 'ராபின்ஸன் க்ரூஸோ' பெரிய புத்தகம், 'லாம் கதைகள்', இந்த மாதிரி, எட்டாவது ஒன்பதாவதுக்கு இங்கிலீஷ் பாடத்துக்குப் புத்தகங்கள் வைப்பாங்க, பாரு, அதெல்லாம் படிச்சிருக்குது! அதன் அலமாரியிலே இந்த மாதிரி பழைய புஸ்தகங்கள் நிரம்பிக் கிடக்குது."

"அதுவா? அந்தக் கிறிஸ்தவப் பெண்ணினுடைய உபகாரங்க அது!" என்று அகிலாண்டம்மாள் மகிழ்ச்சியுடன் சொன்னாள்; "அவங்கள் நாயினு அவங்களுலே ஒரு சாமியார் போலேன்னிட்டு நினைக்கிறேன். அவரை 'பாஸ்டர், பாஸ்டர்' இன்னு அழைக்கிறாங்க. அவங்களுடைய பங்களா ரோட்டுக்கு அந்தப் பக்கமாய் இருக்குது. அந்தப் பெண்ணு மேலே மேலே படிச்சிக்கிட்டே போவுது. சின்னப்போயிருந்து, அஞ்சு கிளாஸ் வரையிலும் இரண்டும் நல்லாப் பழகிட்டுதுனலே எப்பவும் இங்கேயே இருக்குங்க அது. இந்த நேரத்துக்கு அது வரவேண்டியது.—இன்னிக்கி என்னமோ வரக்காணோம். அது ஒவ்வொரு கிளாஸுலே படிக்கிற புத்தகத்தை இதுக்குக் கொடுக்கும். அது எப்படியோ எனக்குத் தெரியாதுங்க.—இப்போ, எங்க வேதம் இங்கிலீஷ் பேபர்கூடப் படிக்கும்" என்று அவள் சொல்லும்போது, வேதம் தன் தாயாரைக் கடைக் கண்ணுல் பார்த்து, முகத்தைச் சுளித்து, தன் கோபத்தைத் தெரிவித்தாள்.

அகிலாண்டம்மாள் அதைப் பொருட்படுத்தா விட்டாலும், புன்முறுவலுடன், "அதன் படிப்புப் பேச்சை எடுத்தால், வேதத்துக்கு மூக்குக்குமேலே

கோபம் வரும்'' என்றாள்.

''ஆவல் இருந்தால் எதையும் கத்துக்கலாம் எங்கள் அக்கா வாத்தியார் அம்மாளை எத்தினி வாட்டி அழ அடிச்சிருப்பாங்க தெரியுமா?'' என்றார் முத்துக் கண்ணு.

''ஆமாம், அப்போ அது வேடிக்கையாய் இருந்தது. சரி, அடுத்த வெள்ளிக்கிழமை நம்ப வீட்டுலே விசேஷ மாச்சுதே; அதுக்கு இவங்களை எல்லாம் இட்டுக்கிட்டுப் போகணுமின்னு பார்க்கறேன்.''

''அதுக்கு என்னைக் கேக்கணுமா, அக்கா?''

''உன் உத்தரவைக் கேக்கல்லையிடா, அப்பா. வரப் போக, கார் வேணுமே.''

''அதுக்கு என்ன, ஏற்பாடு செஞ்சால் போவுது, சுந்தரமே வந்து இட்டுக்கிட்டு வருவான்.''

''வேதம் என்ன முணுமுணுக்குது?'' என்று கற்பகம் அகிலாண்டம்மாளைக் கேட்டாள்.

''அது வீட்டை விட்டுவிட்டு எங்கும் போனதில்லையிங்க. ரொம்பக் கூச்சம். அதுனாலே, ஒரு புது இடத்துக்குப் போகணுமின்னால். அதுக்கு பயம்.— இஷ்டப்படாது'' என்றாள் அகிலாண்டம்மாள்.

''எப்போதான் பயம் தெளியிறது?—பார்த்தியா, அக்கா. இதுக்காகத்தான் பள்ளிக்கூடம், கல்லூரிகளுலே படிக்கவேணுமிங்கிறது. வீட்டோடே இருந்து, படிப்புலே பயிற்சியை அடையலாம். ஆனால் அதனாலே எல்லாரோடும் சகஜமாய்ப் பழக வாடிக்கை ஏற்படாது, தெரியுதா?''

''தெரியுது. அதுக்காகத்தான், நம்பவங்கள்னு ஆனப்புறம், வேதத்தையும் இட்டுக்கொண்டுபோய்

நாலேயும் காட்டலாமின்னு பார்க்கறேன்.—அது என்னமோ தலையை பலமாய் அசைக்குதே'' என்ருள் கற்பகம் புன்சிரிப்புடன்.

"அது உன் சாமர்த்தியம்.—ஆமாம். நீங்கள் போட்டுக்கிட்டே இருக்கிறது. நாங்கள் சாப்பிட்டுக் கிட்டே இருக்கிறதா?''

"ருசியாய் இருந்தால் சாப்பிடவேண்டியது தானே? நான் ஒண்ணு கண்டுக்கிட்டேன்.—வேதம் எது செய்தாலும் ருசியாய்த்தான் இருக்கும்.''

"உங்கள் பேச்சைக் கேட்டுக்கிட்டு இருந்தாலே போதும், பொழுது போறது தெரியாது'' என்ருள் அகிலாண்டம்மாள் ஆனந்தத்தோடு.

சிற்றுண்டிக்குப் பிறகு, வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து. முத்துக்கண்ணு முதலானேர் விடை பெற்றுக்கொண்டு சென்னைக்குத் திரும்பினர்கள்.

4

இளநீர்ச்சாவடிக்கு முத்துக்கண்ணுவின் போக்குவரவு அதிகரித்தது. வஜ்ஜிரவேல் முதலியாரும் தம் குடும்பத் துடன் சென்னையில் முத்துக்கண்ணுவின் மாளிகைக்கு ஒரு மாதத்துக்குள் மூன்று தடவையாவது அழைத்துக் கொண்டு போகப்பட்டிருப்பார். முதலியாருக்கு முத்துக்கண்ணினிடத்தில் இருந்த கௌரவத்தோடு அன்பும் ஏற்பட்டுவிட்டது. அரைப்படிப்பு, கால் படிப்பு ஆசாமிகளைப்போல் இவரைச் சிறிது புத்தி ஸ்வாதினமற்றவன் என்று கருதாமல். இவர் சொல் வதையெல்லாம் அவர் செவி கொடுத்துக் கேட்டார்.

சில வேளைகளில், புதையல் விஷயமாக இவர் வைத்திருந்த அபிப்பிராயங்களையும் அவர் ஆமோதித்தார். இதைவிட இவருக்கு வேறு என்ன வேண்டும்? வர வர வேதத்துக்கும் கூச்சமும் பயமும் தெளிந்து, முத்துக் கண்ணின் முன் சகஜமாக நடந்துகொண்டாள். சில வேளைகளில் பேசவும் பேசினுள் என்றே சொல்ல வேண்டும்.

இளநீர்ச்சாவடியில் முத்துக்கண்ணு வீடு கட்ட ஆரம்பித்துவிட்டார். அஸ்திவாரங்களைப் பலமாகப் போடுவதற்காக, கடைக்கால்களை ஆழமாகவே தோண்டினர்கள். வஜ்ஜிரவேல் முதலியார் கண்கொட்டாமல் ஆராய்ந்து ஆராய்ந்து பார்த்தார். ஆனுல், பாவம், அவர் எதிர்பார்த்தபடி ஒரு புலனும் கிடைக்க வில்லை. சுந்தரத்துக்கு அவனுடைய காரியாலயத்தில் வேலை அதிகமாயிருந்தபடியால், முத்துக்கண்ணு தாம் இளநீர்ச்சாவடிக்குப் போகும்போதெல்லாம், அவனை யும் கூட வரும்படி இமிசை செய்யவில்லை. இது முத்துக் கண்ணுக்குச் சில விஷயங்களில் சௌகரியமாகவும் இருந்தது. ஏனெனில், இப்பொழுது எடுத்ததற்கெல் லாம் ஏதோ ஒரு சாக்கை வைத்துக்கொண்டு அவர் இளநீர்ச்சாவடிக்கு ஓட ஆரம்பித்தார். அங்கிருந்து தம்மை இழுக்கும் ஒரு காந்த சக்தியிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் அவர் தவித்தார். வேதவல்லியும் தம் வரவைச் சதா ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்ததும் அவருக்குத் தெரியும். ஆனுல் இருவரும் தங்களுடைய பலவீன நிலைமையை ஒளிக்க முயன் றனர். பூனை கண்ணை மூடிக்கொண்டால் சூரியன் மறைந்துவிடுமா? கிராமத்தில், வேதவல்லியின் அதிருஷ்

டத்தைக் குறித்துப் பேச்சுக் கிளம்பியது. சிலர் பொரு மைப்பட்டனர்; சிலர் சந்தோஷப்பட்டனர். ஆனால் பட்டணத்திலிருந்து படித்த மாப்பிள்ளை நாட்டுப்புறத் துப் பெண்ணைத் தேடிக்கொண்டு வந்ததைப்பற்றி எல்லாரும் வியந்தனர். அவர்களில் ஒருத்தி, "அதெல் லாம் வீண் பேச்சு" என்றாள்.

"எந்த விதத்துலே வேதம் மாப்பிள்ளைக்குக் குறைஞ்சு போச்சு? — சொல்லு — குலம் இல்லையா? குணம் இல்லையா? அழகு இல்லையா? புத்தி இல்லையா? படிப்புதான் இல்லையா? — பணம் ஒனுமின்னால் இல்லை, நான் ஒத்துக்கிறேன்."

"ஏன் இல்லை? இன்னிக்கும் அவங்கள் சாப்பிட்டு, இன்னும் நாலு பேருக்குப் போடலாம். மோட்டார் வண்டி இருந்தால் எல்லாம் ஆயிட்டுதாக்கும்! அந்தப் பாடையிலே போறவன், ரத்தினங்கூடத்தான் ஒரு மோட்டார் வண்டி வாங்கிட்டான்" என்றாள் மற்றொருத்தி சிரித்துக்கொண்டு.

"அட, அவன் ஒருத்தன் இருக்கானே! வேத வல்லியை நான் தான் கட்டிக்கப் போறேன்னு மாரைத் தட்டுவானே. — இப்போ எங்கே போயிட்டான்?"

"இந்த சங்கதி எல்லாம் அவனுக்குத் தெரியாது. அவன் கொளும்புக்குப் போய் ஒரு மாதம் ஆச்சுதாம்."

"சரிதான். இங்கே கொள்ளையடிச்சது போதா துன்னு அங்கே வேறே போயிட்டானா?" என்றாள் முன் பேசினவள்.

இவ்விதமான திண்ணைப் பேச்செல்லாம் வஜ்ஜிர வேல் முதலியாருக்குக் காற்றுவாரியாகத் தெரியாமல் போகவில்லை. அவர் என்ன பைத்தியக்காரரா? அல்லது

கன் இல்லையா? முதலில், தம் மனைவி வீண் ஆசைப் படக்கூடாதென்று அவர் புத்திமதி சொன்னது வாஸ்தவந்தான். ஆனால் இப்பொழுது முத்துக்கண்ணு வீட்டு மாப்பிள்ளை ஆகிவிடுவார் என்ற நம்பிக்கை உண்டாகிவிட்டது. அதோடு, பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் தேகசிரமத்தைப் பொருட்படுத்தாமல், பூமியில் மறைந்து கிடந்த தனத்தை எப்படியாவது எடுத்துச் சீதனமாகக் கொடுத்துவிடவேண்டும் என்ற ஆசையும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்து விட்டது. முத்துக்கண்ணைப் போன்ற மருமகன் அனைவருக்கும் கிடைத்துவிடுவானா?

இளநீர்ச்சாவடியில் அஸ்திவாரம் பூர்த்தியாகி, கட்டிடமும் தரை மட்டத்துக்கு மேல் ஒரு முழம் எழுந்துவிட்டது. ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணி சுமாருக்கு முத்துக்கண்ணு, வீட்டுக்கு முதலில் போட்ட பிளானுக்கு அமைக்கப்போகும் மாறுதல்களைச் சுந்தரத்துக்கு விவரித்துக்கொண்டிருந்தார். ஒவ்வோர் அங்கமாகப் பார்த்துக்கொண்டு வரும்போது சிறிது தூரத்தில் அவர்களை நோக்கி வருபவன் ஒருவனைக் கண்டு, சுந்தரம் முத்துக்கண்ணுக்கு எச்சரிக்கை செய்தான்: "அவன்தான் ரத்தினம் என்கிறவன். பெரிய சோதா. ஜாஸ்தி பேச்சுக் கொடுக்காதீங்க. அவன் சங்கதியை அப்பாலே சொல்றேன்."

இதற்குள் ரத்தினம் நெருங்கிவிட்டான். "என்னப்பா சுந்தரம், சௌக்கியமா?— நமஸ்காரமுங்க" என்று மலர்ந்த முகத்துடன், வெகு நாள் பழகினவன் போல் முத்துக்கண்ணுக்குக் கைகளைக் கூப்பினான். பட்டுக் கரை தோவத்தி, பட்டு ஷர்ட்டு, மடிப்புக்

கலையாமலிருந்த ஜரிகை அங்கவஸ்திரம், புனுகு, ஜவ்வாது வாசனை, கறுத்த முகத்தில் ஒரு சாந்துப் பொட்டு, மணிக்கட்டில் ஒரு கைக்கடிகாரம் — உடை அலங்காரத்தினலேதான் கௌரவம் சம்பாதிக்க வேண்டியவன் என்பது நிரூபணம் ஆயிற்று.

“சொந்தத்துலேயே கட்டறீங்களா? இல்லாட்டி யாருக்காவது ‘காண்டராட்’ கொடுத்திட்டீங்களா?” என்று கேட்கும்போதே, அவன் கல்விப் பயிற்சியற்றவன் என்பது விளங்கியது.

“‘காண்ட்ராக்ட்’தான்” என்று முத்துக்கண்ணு ஆங்கிலத்தில் அழுத்தம் திருத்தமாகச் சொன்னர்.

“அதுதான் நல்லதுங்க. அவசரத்துக்கு உங்களுக்கு எது தேவையானலும், நம்ம வீட்டிலேயிருந்து எடுத்துக்குங்க. எங்கிட்டே எல்லா சாமானும் இருக்குது. அப்பாலே திருப்பிக் கொடுத்திட்டால் போவுது. உங்களைப் போலவங்க வந்தால், எங்கள் கிராமத்துக்கு ஒரு மதிப்பு ஆச்சுங்களே. — ஏய்யா சுந்தரம், அய்யாவுக்கு விக்கப்போறேண்ணு, நான் வேண்டாமிண்ணு சொல்லப் போறேன்? அதை என் மூடி வைக்கணும்? — இதோ பாருங்க, இந்த வீட்டை முதல்லே நான் வாங்கிருப்போலே பேசிவச்சிருந்தேனுங்க. எனக்காக இல்லை. அதுலே எவ்வளவோ விஷயம் இருக்குதுங்க. என்னுடைய கருத்து, அது வேத்து மனுஷாள் கையிலே போகக்கூடாதுங்கிறது தவிர வேறு ஒண்ணுமில்லை.”

“என்னை வேத்து மனிதனுய் நினைக்க வேண்டாம் நீங்கள். எங்கள் தாயார் பிறந்த ஊர் குன்னத்தூர். இப்போ விசாரித்ததில் சுந்தரத்துக் குடும்பத்துக்கும்

எங்கள் குடும்பத்துக்கும் உறவு உண்டுன்னுகூடச் சொல்றுங்க."

"வாங்கினப்புறந்தானே இந்தப் பேச்செல்லாம்? அதுக்கு முந்தி உங்களுக்குத் தெரியுங்களா? ஏதோ அவன்மேலே இருந்த பிரியத்துனலே, ஒண்ணுக்கு ரெண்டாய்க் கொடுத்து வாங்கிட்டீங்க" என்று அவன் சொன்னது சுந்தரத்துக்குச் 'சுருக்' என்று பட்டது.

"என்ன, என் வீடும் கழனியும் 4500 ரூபாய் பொறுதா? இப்போ நெல் எப்படி விக்கிது?" என்றுன் சுந்தரம்.

"அட, 4500 உம் பொறும், இன்னும் ஆயிரம் கூடப் பொறுமின்னு வச்சுக்கோ. வாங்கிறதுக்கு ஆள் எங்கே? நீங்க வாங்கிட்டீங்க; இல்லாட்டி என்னைத் தவிர அதை வாங்குறதுக்கு இந்த ஊருலே ஒரு சீமான் கிடையாதுங்க! இது உண்மையான பேச்சு. சும்மா பேசிட்டால் ஆயிட்டுதா?— நல்லது, நான் வறேனுங்க. 'பாஸ்டர்' ஞானதுரையண்டை கொஞ்சம் வேலை இருக்குது" என்று பெருமையுடன் பற்கள் வெளிப்பட, அவன் விடை பெற்றுக்கொண்டு சென்றுன். நாலடி நடந்து, பிறகு திரும்பி, "உங்க அட்ரஸு தெரிஞ்சு வச்சுக்கிட்டேனுங்க. பட்டணம் வர்ற போது, கட்டாயம் வந்து பார்க்கிறேனுங்க" என்று மறுபடியும் அவன் ஒரு கூழைக்கும்பிடு போட்டுவிட்டுப் போனுன்.

சுந்தரத்துக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. ரத்தினத்தின் தலை மறைந்ததும், "பெரிய சோதா, ஸார்! நீங்கள் அவனண்டை ரொம்ப ஜாக்கிர

தையாய் இருக்கணும். அவன் கொழுப்பைப் பாருங்க. ஒண்ணுக்கு ரெண்டாய்க் கொடுத்திட்டுங்களாம்! அதாவது நான் உங்களை ஏச்சிட்டாப்போல நீங்கள் அறிஞ்சுக்கணுமாம்'' என்முன்.

''அது எனக்குத் தெரியாதா? அவன் கிடக்கிறுன், அல்பப்பயல்! நீ அவனைப்பத்திக் கவலைப்படாதே.''

''இருந்தாலும் நீங்கள் அவனை அவ்வளவு அலட்சியமாய் நினைக்கக் கூடாது. அவன் செஞ்சிருக்கிறது ஒவ்வொண்ணை நீங்க கேட்டுங்களின்னல்—''

''என்ன சுந்தரம், பைத்தியக்காரனுய் இருக்கிறயே! நம்ம கிட்டேயெல்லாம் அவன் வால் ஆட்டுவானு? உங்கள் பெரியம்மா எங்கள் அக்காவிடம் அவன் சங்கதி பூராவும் சொல்லியிருக்காங்க.''

''எங்கள் பெரியம்மாவுக்கு என்ன தெரியுங்க? பாவம், வீடு உண்டு, அவங்கள் உண்டு. மூணு குடும்பங்களைப் பாழாக்கிட்டானுங்க. இங்கிருந்து ஒண்ணறை மைலிலே ஒரு சின்ன கிராமம் இருக்குது. அங்கேயிருந்து ஒரு தேவதாஸிப் பெண்ணை, சினிமாவுலே சேர்த்து லட்ச லட்சமாய் சம்பாதிக்கும்படி செய்யறேன்னு பட்டணத்துக்கு இட்டுக்கிட்டுப் போய், ஒரு வருஷத்துக்குள்ளே அவள் போட்டிருந்த நாலாயிரம் ஐயாயிரம் ரூபாய் நகையை வித்துப் பாழாக்கிட்டான். கடைசியிலே அவள் கெட்டலஞ்சு, டி. பி. வியாதி பிடிச்சு, ஆறு மாதத்துக்கெல்லாம் செத்தாள். அப்புறம் ஒரு நல்ல சம்சாரிப் பெண்ணையே குட்டிச் சுவராக்கிட்டான். அதுக்கப்புறம் ஒரு தொம்பக் கூத்தாடிப் பெண்ணைப் பிடிச்சானும். அது அழகாய் இருக்குமாம். அதுக்கு அலங்காரம் பண்ணி, அங்கே

இங்கே திருப்பி,— அய்யோ, அவன் சங்கதி ஏன் கேழ்க்கிறீங்க! இவ்வளவுக்கும் போலீசு கையிலே மாட்டிக்காதயே தப்பிச்சுக்கிட்டு வந்திருக்கான். ஆனால் அவங்க மட்டும் இவன்மேலே ஒரு கண்ணுகவே இருந்திருக்காங்க. அதுக்காக அவங்களுக்கு உளவு சொல்றுப்போலே, 'இன்பார்மர்' தொழிலேச் செஞ்சு, அவங்களுக்குக் குல்லாப் போட்டுட்டான்."

"இதெல்லாம் என்ன பேச்சு, சுந்தரம்? பயப்பட பயப்பட, அவன் தலைக்குமேலேதான் ஏறுவான். கழுதையைப் பிடிச்சு, நாயடிக்கிறுப்போலே அடிச்சுப் போடாமல்...." என்று, அஹிம்சையைப் பற்றி எப்பொழுதும் புகழ்ந்து பேசும் தன் ஆசிரியர் சொல்லும்போது, சுந்தரத்துக்குச் சிரிப்பு வந்தது.

"அப்படியும் ஒருத்தர் செய்தார், ஸார். அந்தக் கதையைக் கேளுங்க. கிருஷ்ணசாமி முதலியார்னு ஒருத்தர். அவரும் எங்கள் பங்காளிதான். ஒரு சம்சாரி வீட்டுப் பெண்ணைப் பாழாக்கிட்டான்னு சொன்னேன் பாருங்க, அப்போ எங்கள் மாரியம்மன் கோவிலண்டை அவனை இட்டுக்கினு வந்து, பஞ்சாயத்து பேசறப்போ – அவர் கிருஷ்ணசாமி முதலியார் கொஞ்சம் முன் கோபக்காரர் – அவன் என்னு சொன்னுனே, கால் செருப்பைக் கழட்டி, வாங்கு வாங்குனு வாங்கிட்டார். அதை இந்தப் பயல் மனசிலேயே வச்சிக்கிட்டு இருக்கான். எங்கள் மாரியம்மன் கோவில் ரொம்பக் காலத்தது. இடிஇடிஞ்சு கிடந்தது. அதை சிராக்கி, கொஞ்சம் பெரிதாவும் கட்டணுமின்னு, கிருஷ்ணசாமி முதலியார் ஊக்கமாய் வேலே செஞ்சார். சிமெட்டு, இரும்புக்கம்பிகள் கிடைக்காமல் ரொம்ப

கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்தாராம். அதை இவன் கவனிச்சிருக்கான். அவனுக்குதான் திருடும் கறுப்பு மார்க்கெட்டும் தண்ணி பட்ட பாடாச்சே! எவனையோ ஒருத்தனைக் கூப்பிட்டு, அம்மனுக்குப் பணி செய்யறுப் போலே வேஷம் போடச் சொல்லி, மிலிடெரியிலே திருட்டுப்போன சாமான்களாய்ப் பார்த்துப் பொறுக்கி, முதலியாருக்குக் கொடுக்கச் சொல்லிட்டான். முதலியாருக்கு சந்தோஷம்! ஆ ஊவுனு கூவிக்கிட்டு. உற்சாகத்தோடு வேலை நடத்திட்டிருக்கிற சமயத்திலே, போலீஸ்காரங்க அந்த மாரியம்மன் கோவிலண்டையே அவரைப் பிடிச்சுக்கிட்டாங்க. எல்லாம் அந்தப் பயல் வேலைதான். அவன் முதலியாரை ஏசி இருக்கானும் பாருங்க—''

''ஆமாம், இந்த முதலியாருக்கு என்ன வந்தது கேடு! கறுப்பு மார்க்கெட்டுலே சாமான் வாங்கிக் கோவில் கட்டல்லேயினு, அந்த அம்மன் அவரண்டை வந்து அழுததா? அப்புறம் அவர் கதி என்ன ஆச்சுது?''

''துட்டு செலவழிச்சால் தெரியாதுங்களா?—ஆயிரம் ரூபாய் செலவு செய்து தப்பிச்சுக்கிட்டாராம். ஆனால் அவமானப்பட்டது பட்டதுதான்!'

''நல்லா வேணும். சரி, அந்தக் கழுதை பேச்சை விட்டுத் தள்ளு. ஒரு நிமிஷத்துலே அவனைப் பொட்டிப் பாம்பாய் அடக்கிடலாம். இப்போ, வெள்ளிக் கிழமை நம்ப பிளான் போட்டாப்போலே நடத்தியாகணும். அதை மறந்துடாதே.''

''அதுக்குள்ளே குடத்தைக் கொண்ணுந்து வைக்கணும்.''

''வச்சாயிட்டுது.''

"எப்பங்க?— என்னைக் கூப்பிடவேயில்லையே!" என்றான் சுந்தரம் ஆச்சரியத்துடன்.

"அதுமாதிரி நேர்ந்திட்டுது. மூணும் நாள் மயிலா பூருலே அதிகாரநந்தி பார்க்கணுமின்னு, பெரியவர் ஊருலே நாலஞ்சு பேரோடே புறப்பட்டு, சாயங் காலமே பட்டணம் வந்திட்டார். இதான் சமயமின்னு, அவசரமாய் வந்து, நானும் மாணிக்கமுமாய் வேலையை முடிச்சிட்டோம். தினம் மாணிக்கமே காவல் படுத்துக்கிறான்."

"ஏன், யாராவது பார்த்திட்டாங்களா?"

"ஓ! மூச்சு விடக்கூடாது. ரொம்ப சாமர்த்திய மாய் நடத்திட்டோம். இருந்தாலும், நம்ப புதைக் கறதும் மறைஞ்சுபோனால்?" என்று முத்துக்கண்ணு அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

"அது எங்கே போகும், ஸார்? மாணிக்கம் என்ன சொல்றான்?—அவன் ரொம்ப நல்லவன், ஸார். அவனை நம்பி எதுவும் செய்யலாம்."

"அதுலே சந்தேகம் என்ன? எப்படியாவது பெரிய வருக்கு அந்தப் பைத்தியம் தெளிஞ்சிட்டால் போது மிங்கறான். தலைமுறை தலைமுறையாய் ஊரிலே பழகினவங்களாமே. ஆனால் அவனும் முதல்லே, அது நிஜமாய்ப் புதையல் எடுத்த குடமாக்குமின்னு நம்பிட்டான். நம்ம ப்ரொபஸ்ஸர் ரொம்ப வேலை செஞ்சிட்டார். அந்தக் குடத்துக்கு, வருஷக்கணக் காய் மண்ணுலே புதைஞ்சுகிடந்தால் என்ன நிறம் வருமோ, அதைக் கொண்ணுந்திட்டார். ரூபாய் நூறும் ஹைதராபாத் நாணயம். அதுக்கும் ஒரு கலரை ஏத்திட் டார். பாக்கி எல்லாம் கரியாய்ப்போன ரூபாய்கள்!

பெரியவர் அதுங்களை உடைச்சுப் பார்த்து, சந்தேகப் படுவாரோ?"

"ஊம், பாவம், அவ்வளவு தூரம் அவருக்குத் தெரியாதுங்க. சரியாய்ப் போயிடுமின்னு அவரே நம்புறாரே."

"நாமுந்தான் உருவேத்தியிருக்கோம். வெள்ளிக் கிழமை நீ, நான், பெரியவர், மாணிக்கம்—நாலு பேரும் சேர்ந்திருந்துதான் அதை முடிக்க வேணும்."

"நான் வரதைப்பத்தி அவர் எதுவும் சொல்லலையா?"

"ஒண்ணும் இல்லே. கடவுள் புண்ணியத்துலே அதிகப் பணம் கிடைத்தால், உனக்கும் கொஞ்சம் தர வேண்டுமின்னு சொல்லிக்கொண்டு இருக்கார்.—இரண்டு மூணு பேர் இல்லாத போனால், வேலையாகா தின்னு அவருக்கும் தெரியுமல்ல?"

"நாம ஒரு இடத்துலே தோண்டப் போனால், அவர் இன்னொரு இடத்தைக் காட்டினால் என்ன செய்யறது? அவர் ஏதேதோ கணக்குப் போட்டு வச்சிருக்காரே."

"அதுக்குக்கூட என் சிநேகிதர் டாக்டர் வேதாசலம் ஏற்பாடு செஞ்சுட்டார். உனக்குதான் தெரியுமே அவரைப்பத்தி. உடம்புக்கு வைத்தியம் செய்தாலும், மனசுக்கு வைத்தியம் செய்தாலும், சரி வர வஞ்சனையில்லாமல் தன் மூளைக்கு எட்டினதை எல்லாம் செஞ்சிடுவார். அவருக்கு இருக்கிற மூளை எல்லாருக்கும் இருந்தால் நம்ப தேசம் எப்பவோ உருப்பட்டிருக்கும்.—இல்லையா?"

ஆமோதிப்பதுபோல், சுந்தரம் தலையசைத்தான்.

"மந்திரம் தந்திரத்துலே எல்லாம் அவருக்கு நம்பிக்கை உண்டு. அவரும் கொஞ்சம் அதுலே உழண்டவர் ஆச்சே. மந்திரவாதியைக் கூப்பிட்டு, மை போட்டுப் பார்த்ததுலே, பலாறு பலாறு இடத்துலே புதையல் இருக்கிறப்போலே அவன் சொன்னதாக, நாம் வச்ச இடத்தையே பெரியவருக்குக் காட்டிடறதுன்னு யோசனை சொன்னார். பெரியவரும் அதை ஒத்துக்கிட்டார், அப்பா!"

"உங்களுக்கு நல்ல வேலை கிடைச்சுது, ஸார்!" என்றான் சுந்தரம் வேடிக்கையாய். ஆனால் அவன் சொற்களைக் கேட்க, முத்துக்கண்ணுவின் முகம் அசடு தட்டியது.

"ஒரு வேலையைத் துவக்கிட்டால், அதைச் சரிவர செய்துதானே ஆகணும்? டாக்டர் நல்ல அறிவாளி. இப்படி செய்தால், கிழவனாருக்குப் புதையல் பைத்தியம் மனசுலேயிருந்து அடியோடு அத்துப் போகுமின்னு சொல்றார். ஒரு 'சான்ஸ்' பார்க்கிறதுலே என்ன பிசகு?"

"அய்யய்யோ! ஒரு பிசகும் இல்லே, ஸார். எங்கள் பெரிய நாயினாவுக்கு லகுவாய்விட்டால், எனக்குச் சந்தோஷம் இல்லையா?—எனக்கு என்னுங்கறிங்களா, இந்தச் சங்கதியை நம்ப ரெண்டு மூனு பேருக்குள்ளே முடிச்சிக்கணுமின்னு."

"அது எப்படி முடியும், சுந்தரம்? வேதவல்லிக்கும் அதன் அம்மாவுக்கும் தெரிஞ்சுதான் தீரணும். வேணுமின்னால், எங்கம்மாவுக்கும் அக்காவுக்கும் தெரியாமல் இருக்கலாம். பின்னாலே என்ன பேச்சு வரும் தெரியுமா?—நான் கலியாணம் ஆகறதுக்கு முந்தியே,

பெண்டாட்டி வீட்டுக்காரங்களோடே சேர்ந்துக்கிட்டேன்னு சொல்லுவாங்க.''

சுந்தரம் சிரித்தான்.

''ஆமாம், நீ ரெங்கூன் போனால், எப்போ வருவே?''

''ஒரு மாதம் ஆகும், ஸார். ரொம்ப வேலையைக் கொடுத்திருக்காங்க'' என்றான் சுந்தரம்.

''அவ்வளவு நாள் தாங்க முடியாதப்பா! மாணிக்கம் பகலெல்லாம் வேலை செஞ்சிட்டு, ராவுலே வேறே கண் முழிச்சிருப்பானா?—சரி, இந்த வெள்ளிக்கிழமை ஏது எப்படியானாலும், நம்ப வேலையை முடிச்சிட வேண்டியதுதான். இது கண்டிப்புன்னு, உங்கள் பெரியம்மாவண்டையும் சொல்லிடலாம், வா.''

''பெரியவர் திரும்பிவர டைம் ஆச்சுதே.''

''அவர் ஏழு மணிக்கு முந்தி வரவே மாட்டார். ஒரு நாள் தவறாமல், குன்னத்தூர் போய், சாமியை வேரோடு பிடுங்கறாராம். பஸ், கார் சந்தடி அதிகமாயிருக்குது, போக வேண்டாமின்னாலும் கேட்கமாட்டேங்கறாராம். புதையல்னால், அவ்வளவு ஆசை!''

பிறகு, இருவரும் அகிலாண்டம்மாளிடம் சிறிது நேரம் ரகசியமாகப் பேசிவிட்டு, சென்னைக்குத் திரும்பினார்கள்.

5

இரவு சுமார் ஒரு மணி நேரம் இருக்கும். சாமான்களை வைப்பதற்குப் போடப்பட்டது போல இருந்த ஒரு சிற்றுக் கொட்டகையில், முத்துக்கண்ணு, சுந்தரம்,

மாணிக்கம், வஜ்ஜிரவேல் முதலியார் இந்த நால்வரும் நுழைந்தனர். வஜ்ஜிரவேல் முதலியாருக்கு, காலியாய் இருந்த இடத்தில், இந்தக் காரியத்துக்காகத்தான் கொட்டகை போடப்பட்டதென்று தெரியும். அவருக்கு இரவில் பார்வை மிகவும் குறைவு. இருந்த போதிலும், தரை கலைக்கப்படாமல் கெட்டியாகவே இருந்ததென்பதை நிரூபிப்பது போல, மாணிக்கம் அதன் மேல், இங்கொன்றும் அங்கொன்றுமாக முளைத்திருந்த அறுகம்புல்லுடன் கூடிய மண்ணாங்கட்டிகளை அறைந்து வைத்திருந்தான். கொட்டகையின் மூலையில் போட்டிருந்த ஒரு பெஞ்சியின் மீது, கிழவரை உட்கார வைத்துவிட்டு, மாணிக்கம் மண்வெட்டி எடுத்துத் தோண்டினான். அவன் வேண்டாமென்றும் கேளாமல், அவனுக்கு உதவி செய்வது போல், சுந்தரமும் முத்துக்கண்ணுங்கூட மாறி மாறி வேலை செய்தனர். பொறுமையுடன், தாங்கள் அழைக்கும் வரையில், அவர் இடத்தை விட்டு நகராமலும் பேசாமலும் இருக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். நள்ளிரவில், சிறிது சத்தம் செய்தாலும், பெரிய சந்தடி ஏற்பட்டுவிடுமென்று அவரைப் பயமுறுத்தினார்கள். கிழவரும், பதற்றத்துடன், கண் கொட்டாமல் அவர்கள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் பார்த்தும், பாவம், அவருடைய குன்றிய திருஷ்டிக்கு ஒன்றும் தெளிவாகப் புலப்படவில்லை. மண் வெட்டி எடுப்பதில், மாணிக்கம் இப்படியும் அப்படியுமாக ஒரு மணி நேரத்தைக் கழித்தான். பிறகு கடப்பாரையைப் போடும் பொழுது, 'கிலுக்' என்று சத்தம் கேட்டது. வஜ்ஜிர

வேல் முதலியார் பதறப் பதற ஓடி வந்தார். குழியில் விழுந்து விடாதபடி, முத்துக்கண்ணு பிடித்துக் கொண்டார். தாமும் கீழே இறங்கிப் பார்க்க வேண்டுமென்று வருந்தினர். சிறிது பொறுக்கும்படி முத்துக்கண்ணும் சுந்தரமும் அவருக்குச் சமாதானம் சொல்லித் தடுத்தனர். மாணிக்கம் பெருமூச்சு விட்டுக்கொண்டு, மண்ணை இரு கைகளாலும் பிராய்ந்து, குடத்தை மேலே தூக்கினன். அப்பொழுது, வஜ்ஜிர வேல் முதலியாரை அடக்கிப்பிடிப்பது கஷ்டமாகி விடவே, அவரை மெதுவாகக் குழியில் இறக்கினர். முதலியார் குடத்தைத் தடவினர்; தூக்கினர். "இன்னும் ஏதாவது இருக்குதா, பார்.— இல்லாட்டி நான் வெட்டுறேனே, மாணிக்கம்!" என்று குரல் நடுங்கக் கெஞ்சினர்.

"உங்களாலே முடியாதுங்க. இவ்வளவு செஞ்சவன், அதையும் செய்யமாட்டேனு?" என்று மாணிக்கமும் கெஞ்ச ஆரம்பித்தான். அவன் சொல்லுவதும் ஒப்புக்கொள்ள வேண்டியதே என்று அவருக்குப் பட்டது. ஆனல், குடத்தை விட்டுப் பிரிய இஷ்டமில்லை. குடத்துடன் வெளிவர முயன்ருர்; ஆனல் முடியவில்லை. அப்பொழுது, முத்துக்கண்ணும் சுந்தரமும், அவரைக் குழியிலிருந்து மேலே தூக்கி விட்டு, பிறகு குடத்தை எடுத்துக் கொடுத்தனர். முதலியார் குடத்தைக் கெட்டியாக அணைந்துகொண்டு, மேட்டில் உட்கார்ந்தவாறு, மாணிக்கத்தை மூலைக்கு மூலை ஆழமாக வெட்டும்படி உயிரை வாங்கினர். இதுவரையிலும் மாணிக்கம் வேலை செய்தது பொய், இப்பொழுது செய்வதே உண்மை என்ருகிவிட்டது. வேர்த்து,

இரைக்க இரைக்க, அவர் சொன்னபடி யெல்லாம் ஆடினன். பிறகு, "இனி ஒண்ணும் கிடையாதுங்க" என்று அவன் சோர்ந்து உட்கார்ந்துவிட்டான்.

"சரி, மேலே வந்திடு. ஒரு குடமின்னுதான் சொல்லிப்பாங்க. பொன் ஆயிரம் வெள்ளி ஆயிர மின்னு சொல்லுவாங்க. அவ்வளவு கொள்ளுமா இந்தக் குடம்?"

"அதுக்கும் மேலேயே கொள்ளுங்க. இந்தக் காலத்துக் குடமா இது!" என்று மாணிக்கம் சொல் லிக்கொண்டே மேலே வந்தான். தம் மனைவி அகி லாண்டம் எவ்வளவு ஆத்திரத்தோடு தமது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் என்பதை முதலியார் உணர்வார். ஆகவே, தாமே குடத்துடன் முதலில் சென்று, அவள் மனத்தைக் குளிரச்செய்ய வேண்டு மென்று, எல்லாருக்கும் முந்தி அவர் விரைந்து நடந் தார். தெருக் கதவைத் தாழ்ப்பாளிட்டுக்கொண் டிருந்தபோதிலும், ஜன்னல் வழியாக அவர்கள் வருவ தைக் கண்ட அகிலாண்டம்மாள் ஓடிக் கதவைத் திறந் தாள். பிறகு, ஜாக்கிரதையுடன் தெருக்கதவை மறு படியும் தாழ்ப்பாளிட்டு, ஜன்னலே இல்லாமல், குகை போல் இருந்த ஓர் அறையில் எல்லாரும் கூடினர். குடத்தின் மீது மண் மூடி, கெட்டிப்பட்டுக் கிடந்த தால், வஜ்ஜிரவேல் முதலியார் ஒரு கரண்டியைக் கொண்டுவரும்படி தம் மகளிடம் சொன்னர். ஒரு நொடியில் வேதவல்லி அதைக் கொண்டுவந்து கொடுத் தாள். முதலியார் கைகூப்பி, முருகனுக்குப் பிரார்த் தனை செய்துவிட்டு, கரண்டியின் காம்பினுல் மண் ணைச் சுரண்டி எடுத்தார். அப்பொழுது குடத்தைத்

தலைகீழாய்க் கவிழ்ப்பதாய் முத்துக்கண்ணு முன் வந்தார்.

"சே! சே! லட்சுமி ஆச்சுதே! தலைகீழாய்க் கவுக்கலாமா? மேலிருந்தே எடுக்கிறேன்." முதலியார் ஆனந்தத்தால் பூரித்து, குடத்தில் கையை விட்டு, ஒரு பிடி எடுத்துக் கீழே வைத்தார். எவ்வளவு அழுக்குப் பிடித்திருந்த போதிலும், அவை வெள்ளி நாணயங்கள் என்பது நன்ருகப் புலப்பட்டது. அவைகளில் ஒரு பொன்னும் இருந்தது; முதலியார் இரண்டாவது பிடியை எடுத்துக் கீழே வைத்தார். அதில் பொன் நாணயங்கள் நாலைந்து இருந்தன. துரிதமாக மூன்ரும் தரம் எடுத்தார். ஏழெட்டுப் பொன் காசுகள் இருந்தன. நாலாவது பிடியில் பொன் குறைந்தது. ஐந்தாம் தரம் எடுத்த பொழுது, ஒரே ஒரு பொன் தான் கிடைத்தது. பிறகு வெறும் வெள்ளியாகவே வந்தன. இவ்வாறு பத்துப் பன்னிரண்டு தடவை எடுத்த பிறகு, வெள்ளியோடு கரியாய் மாறின நாணயங்கள் வரத்தொடங்கின.

"இதென்னது!" என்று முதலியார் பிரமித்துப் பெருமூச்சு விட்டார். வரவர எல்லாம் கரி நாணயங்களாகவே இருந்தன. முதலியார் சாய்ந்து கீழே விழப்போகும் சமயத்தில், அவர் மனைவி தாங்கிக் கொண்டாள். அவருக்கு உடம்பெல்லாம் வேர்த்துக் குளிர்ந்துவிட்டது. "முருகா! முருகா!" என்று புலம்பினர். ஒருவரும் வாயைத் திறக்கவில்லை. அந்தச் சமயத்தில், யாரால் அவரைச் சமாதானப்படுத்த முடியும்! "அகிலாண்டம், இந்தச் சொத்துக்கு நாம் பொறுப்பாளி அல்ல போலிருக்குது. இல்லாட்டி, அது நியாயமாய் சம்பாதிச்ச பொருளாய் இருக்காது.— முருகா!

உன் செயல்! இதுக்கா என்னை இத்தினி நாள் காக்க வச்சே? அப்பா! குளந்தைவேல்! பழனிவேல்! ரொம்ப ஆசைப்பட்டுட்டேன். இன்னியோடு, அந்த ஆசையை விட்டுவிட்டேன்! என்னை மன்னிச்சிடு!—அகிலாண்டம், ஆம்பிட்ட வெள்ளியையும் பொன்னையும் வேலன் உண்டிகைக்குச் செலித்திடு. நமக்கு அது வாணும். அதிலே அவனுடைய அருள் இல்லை. எனக்கு நல்லாத் தெரிஞ்சுபோச்சு. ஆமாம், என் பேச்சைக் கேள். ஒளிச்சு வச்சுடாதே! உன் ஒரு குழந்தையாவது நல்லா இருக்கணும். ஆஹா! பெரியவங்கள் சொன்னது எப்பவும் பொய்யாகாது. பொன்னு மண்ணாயிடும்! மண்ணு பொன்னாயிடும்! அப்பா முத்துக்கண்ணு, இனி குடத்தைக் கவிழ்த்திடு. அதுலே என்ன இருந்தாலும் எனக்கு வேண்டாம். கரியை உண்டியிலே போடக்கூடாது. முருகனுக்குச் சேரவேண்டியது இன்னும் ஏதாவது இருக்குதான்னு பார்த்திடு அவ்வளவுதான்.''

முத்துக்கண்ணு குடத்தைக் கவிழ்த்தார். அறை முழுவதும் கரித்துண்டுகள் ஓடின. அதைப் பிராய்ந்து பார்த்தனர். முதலியார் பெருமூச்சு விட்டுக் கொண்டு, மௌனமாய் அதைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் உலோக சம்பந்தமான வஸ்து ஒன்றும் கிடைக்கவில்லை. சுந்தரம் குடத்திலிருந்து எடுத்த நாணயங்களையெல்லாம் ஒன்று சேர்த்து, ஒரு துணியில் மூட்டை கட்டினான்.

''நெஞ்சு அடைக்கிறப் போலே இருக்குதே! குடிக்கத் தண்ணி கொண்டு வா, அம்மா'' என்று முதலியார் வேதவல்லியினிடம் சொன்னார். அவள் தண்ணீர்

கொண்டுவர ஓடினாள். எல்லாரும் பயந்துவிட்டனர். அகிலாண்டம்மாள் தன் கணவனின் மார்பைத் தொட்டுப் பார்த்து, திகில் அடைந்தாள். முதலியார் நடுங்கிய கைகளோடு தண்ணீரைப் பருகினார். தம் புதல்வியினிடம் பாத்திரத்தைக் கொடுக்கும் பொழுது, அவள் முகத்தைப் பார்த்து, பலபலவென்று கண்ணீர் விட்டார்.

"உன் பாடுதான், அம்மா, கஷ்டம்" என்று அவர் சொன்ன போது, வேதவல்லிக்கும் அழுகை வந்து விட்டது. அதன் மேல் அவளுடைய தாயாரும் அழத் தொடங்கிவிட்டாள்.

"ஒண்ணுமில்லேயிங்க. வெறும் படபடப்பு. கொஞ்சம் நேரத்துக்கெல்லாம் சரியாய்ப் போயிடும். சுந்தரம், அந்த விசிறியை எடு.— சரி, பலமாய் விசிறு" என்று முத்துக்கண்ணு சொன்னாரே தவிர, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டுவிட்டதோ என்ற பயம் அவருக்கும் உண்டாகிவிட்டது. முதலியார் முத்துக் கண்ணுவை உற்றுப் பார்த்தார்; பிறகு அவருடைய திருஷ்டி வேதவல்லியின் மீது விழுந்தது. உடனே மறுபடியும் கண்ணீர்விட ஆரம்பித்துவிட்டார்.

"ஏனுங்க அநாவசியமாய் வருத்தப்படறீங்க? இது அதிர்ச்சியாலே உண்டான படபடப்புங்க. கால் மணி அரை மணியிலே அதுவே சரியாப் போகும்" என்று முத்துக்கண்ணு, பின்னும் சமீபமாக வந்து உட்கார்ந்துகொண்டு, அவரைச் சமாதானப்படுத்த முயன்றார்.

"அப்பா, நீ சொல்றதை நம்பத்தான் வேணும். நீ அறிவாளி, நீ சத்தியவான். பெரிய குடும்பத்தைச்

சேர்ந்த பிள்ளை.—முருகா! நான் எவ்வளவோ ஆசைப் பட்டேனே! ஆசை காட்டிக் கெடுத்திட்டயே!—அப்பா முத்துக்கண்ணு, நான் ஏழைப்பட்டவன், என் குழந்தை ஏழைப்பட்டது, ஆனால்—'' என்று மேலே பேச முடியாமல் பெருமூச்சு விட்டுக்கொண்டு விம்மினார்.

''நீங்கள் ஏழைப்பட்டவங்கன்னு யாருமே நினைக் கில்லையே. செல்வமின்னு, பணம் ஒண்ணுதானா? குணம் செல்வமில்லையா? பெருந்தன்மை செல்வ மில்லையா? உங்கள் மகளே உங்களுக்கு ஒரு செல்வ மாச்சே!''

''உண்மையிலே அப்படி நீ நினைக்கிறயா முத்து?—நிஜந்தானா? அப்போ—அப்போ, என் ஆசை நிறைவேறுமா? நீ என் மருமகப்பிள்ளை ஆ—'' என்று முதலியார் பேசச் சக்தியற்றவராய், மறுபடியும் கண்ணீர் விட்டார். அவர் எண்ணங்களை ஊகித்து உணர்ந்து முத்துக்கண்ணு உடனே கைகொடுத்து வாக்குத்தத்தம் செய்தார்:

''மாமா, வேதவல்லியைத் தவிர்த்து நான் வேறு யாரையும் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன்! நீங்கள் இதுக்காகக் கவலைப்படவேண்டாம். மறுக்காம லிருக்கும்படி நீங்கள் வேதவல்லிக்குத்தான் சொல்ல வேண்டும்.''

''அது ஏன் அப்பா, மறுக்குது? அதன் மனம் எனக்குத் தெரியாதா? என்னுத்துக்கு, அப்பா, உனக்கு அந்த சந்தேகம்? என் கையாலே அதை உனக்கு ஒப்பிச்சிடறேன்.—அம்மா, வேதவல்லி, இப்படி வா.—ரெண்டு கையையும் ஒண்ணாக்கு.—முத்து, கையைத்

திற.—இந்தா, இது இனிமேல் உன்னுது, உன் பொருள்."

"என்ன நாயினு, இப்படிப் பயப்படுத்துறீங்களே!" என்று வேதவல்லி 'ஓ'வென்று அழ ஆரம்பித்து விட்டாள். கிழவனுர் வாய் திறக்கவில்லை. முத்துக் கண்ணு வேதவல்லியின் கைகளை விட்டுவிட்டு, எழுந்து சிறிது தூரம் சென்று, சுந்தரத்துடன் கலந்து பேசினர். முத்துக்கண்ணு, காலதாமதம் செய்யாமல் உடனே சென்னைக்குச் சென்று, தம் நண்பர் டாக்டர் வேதாசலத்தை அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார். சுந்தரம் இரவைத் தள்ளக்கூடாதா என்று யோசித்தான். அவ்வளவு அபாயம் இல்லை என்றும், அப்படி இருக்குமானுல், அவர்கள் போய் வருவதற்குள் ஏதாவது நடந்து விட்டால் என்ன செய்வதென்பதும் அவனுடைய அபிப்பிராயம்.

இப்பொழுது கிழவனுர் குறட்டையிடுவது அவர்களுக்குக் கேட்டது. விருத்தாப்பியத்திஞலும் கவலையினுலும் உடலும் மனமும் தளர்ந்து, 'கடகடத்து'ப் போகவே, முதலியார் மெய்ம்மறந்து தூங்கினுர். அகிலாண்டம்மாளும், அவருக்கு ஒரு தலையணையை வைத்துவிட்டு எழுந்து வந்தாள். அவர்களுடைய சம்பாஷணையைக் கேட்டு, "நாடி சரியாய் இருக்குது; சுந்தரம். ஒண்ணும் பயமில்லை. மனக்கலக்கம், பாடு, எல்லாம் சேந்திச்சு; அவ்வளவுதான். குன்னத்தூருலே ஒரு டாக்டர் இருக்கார். விடிஞ்சப்புறம் அவரை அழைச்சிக்கிட்டு வரலாம். அப்பாலே பட்டணத்துப் பெரிய டாக்டர் வேணுமான்னிட்டு யோசிச்சால்

போவுது. நீங்கள் நிம்மதியாய்ப் படுத்துத் தூங்குங்க. ஒரு கவலையும் இல்லை.—அம்மா, அவங்களுக்குத் தலையணைங்கள் எல்லாம் கொண்ணுந்து கொடு. கொஞ்ச நேரமாவது தூங்கட்டும்.—அப்பா மாணிக்கம், நீ ஏன் காத்திருக்கே? வீட்டுக்குப் போ. எங்களாலே உனக்கும் கஷ்டம்.''

''போகிறதுக்கு அரைமணி, வரதுக்கு அரை மணி; அவ்வளவுதானுங்க. பட்டணம் போய் டாக்டரை அழைச்சிக்கிட்டு வந்திட்டால் என்ன?'' என்ருர் முத்துக்கண்ணு.

''அம்மாவுக்குக் கைபார்க்க நல்லாத் தெரியும். அதுவே சொல்றபோது, உங்களுக்கு ஏன் சந்தேகம்?—இந்த இருட்டுலே எப்படிப் போவீங்களாம்?'' என்று வேதவல்லி சொன்னபொழுது, அகிலாண்டம்மாளின் முகத்தில், அவளை அறியாமல், ஒரு புன்புறுவல் தோன்றியது. வேதவல்லி வெட்கத்தோடு அப்புறமாகச் சென்ருள். மாணிக்கம் விடைபெற்றுக்கொண்டு சென்ருன். முத்துக்கண்ணுவும் சுந்தரமும் படுத்த மறு நிமிஷத்தில் அயர்ந்து தூங்கிவிட்டார்கள்.

6

மறுநாள் வஜ்ஜிரவேல் முதலியார் வழக்கம்போல் அதிகாலையில் எழுந்திருந்து, மௌனமாகத் தம் அலுவல்களைக் கவனித்தார். ஆனல், முகத்தில் மாத்திரம் வியாகுலம் குடிகொண்டிருந்தது. உடல் சிகிச்சைக்காகப் பயந்து உடனே டாக்டரைத் தேடவேண்டிய நிமித்தம் இல்லை என்று அனைவருக்கும் பட்டது. இருந்தாலும்,

மாலையில் தம் நண்பர் டாக்டர் வேதாசலத்தை ஒரு முறை அழைத்து வந்து காட்டிவிடுவதென்று முத்துக் கண்ணு தீர்மானித்துக்கொண்டார். அவரும் சுந்தர மும் சீக்கிரம் பட்டணத்துக்குத் திரும்பவேண்டி யிருந்ததால், அவரிடம் எப்படி விடைபெற்றுக் கொண்டு போவதென்று தவித்துக்கொண்டிருந்த பொழுது, கிழவனாரே தம் துரதிருஷ்டத்தைக் குறித்து முறையிட்டுக்கொண்டார்.

"எவ்வளவு தலைகீழாய் நின்னாலும், நாம கொடுத்து வச்சதுதான் கிடைக்கும். இல்லாட்டி, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத போயிடுமா? முருகா!" என்று அவர் பெருமூச்சு விட்டார்.

"இதுவும் நல்லதுக்குத்தானுங்க. பணமாய்க் கிடைச்சிருந்தால், பலி வாங்கி இருக்குமோ என்னமோ!" என்று சுந்தரம் சொல்லிவைத்தான்.

"இருந்தாலும் இருக்கும்" என்று கிழவர் ஒப்புக் கொண்டார்.

"இத்தோடே நம்பளைப் பிடிச்ச பீடை விட்டு தென்னு நினைச்சுக்கிங்க. குலமே நாசமாய்ப் போயிட் டால், பணத்தை வச்சிக்கிட்டு யார் வாழுறது? எனக்கு என்னமோ, சுந்தரம், தலைக்கு வந்தது தலைப்பாவோடு போச்சின்னுதான் இருக்குது" என்றாள் அகிலாண்டம் மாள். பிறகு, "சரி, நீங்கள் ஆபீஸுக்குப் போறவங் கள், அப்பா. தாமதமானால் அதுக்கு வேறே பொல் லாப்பு வரப்போவுது" என்று அவள் எச்சரித்தாள்.

அதன்மேல், முத்துக்கண்ணும் சுந்தரமும் விடை பெற்றுக்கொண்டு சென்றனர். வழி எல்லாம் அவர் களுடைய சம்பாஷணை கல்யாணத்தைக் குறித்தே

இருந்தது. முத்துக்கண்ணு உடனே நடத்திவிட வேண்டுமென்று ஆத்திரப்பட்டார். ஆனல், சுந்தரம் கம்பெனி காரியமாக ரங்கூனுக்குச் சென்று, குறைந்தது மூன்று வாரங்களாவது அங்கே தாமதிக்கவேண்டியிருந்ததால், அவன் திரும்பும்வரையில் ஒன்றும் செய்வதற்கில்லையே என்று முத்துக்கண்ணு வருந்தினர்.

ஒரு நாள் போவது அவருக்கு ஒரு வருஷம்போல் இருந்தது; கணக்கிட்டுக்கொண்டே வந்தார். இன்னும் சுந்தரம் திரும்ப மூன்று நாட்களே இருந்தன. பரபரப்பு அதிகரிக்க, மாலை தவருமல், அவர் இளநீர்ச்சாவடி போய்வர ஆரம்பித்தார். ஆனல் உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூட முடியுமா? வேதவல்லியின் அதிருஷ்டத்தைப் பற்றிப் பேசாதவர்கள் இல்லை. இந்தப் பேச்செல்லாம் ரத்தினத்துக்கு எப்படி எட்டாமல் போகும்? இப்பொழுதுதான் விஷயங்கள் வெகு தூரம் போய்விட்டன என்று அவனுக்குத் தெரிந்தது. கொளும்புக்குச் சென்றது எவ்வளவு தவருகிவிட்டது! ஆனல், அந்தப் 'பொறுக்கி'ப் பயல் சுந்தரம் தனக்குத் தெரியாமல் தன் வீட்டையும் நிலத்தையும் அந்நியனுக்கு விற்றுவிடுவானென்று எப்படி ஊகிக்க முடியும்? வீட்டை வாங்கினதனுலேதானே அந்தப் படித்த முட்டாள் முத்துக்கண்ணு வேதவல்லியின் மேல் பார்வையைச் செலுத்த நேர்ந்தது. மடையன்! படித்தவனும்! மூளை இருந்தால் அவ்வளவு விலையைக் கொடுப்பானு? ஒருவேளை வேதவல்லியை அடித்துக்கொண்டு போவதற்காகவே, பக்கத்து வீட்டைத் தன் வசப் படுத்திக்கொண்டானே? ஆனல், வீட்டை வாங்குவதற்கு முன் அவளை அவன் எப்படித் தெரிந்துகொண்

டிருக்கக்கூடும்? நினைக்க நினைக்க, ரத்தினத்துக்குக் கோபந்தான் அதிகரித்தது. அவன் முதல் முதலாகக் கவனிக்கவேண்டியது அந்தக் கல்யாணத் தடங்கல் தான். மற்ற விஷயங்களைப் பிறகு யோசித்துக்கொள்ள லாம். தன்னைத் தவிர வேதவல்லியை மணந்து கொள்ள மற்றொருவன் பிறந்தானு என்று மாரைத் தட்டிக்கொண்டான். திடீரென்று அவனுக்கு ஏதோ ஞாபகம் வரவே, அவன் முகம் புன்முறுவலோடு மலர்ந்தது. யுக்திக்குத் தன்னை மிஞ்சினவன் இல்லை என்று சந்தோஷப்பட்டுக்கொண்டான். பின்னுல் எதற்காவது உபயோகப்படுமென்று ஆயிரத்தெட்டு 'குசமசக்கு'களைச் செய்வது அவன் வழக்கம். அவன் செய்தது ஒன்ரு இரண்டா? பொய்யும் மோசமும் இல்லாமல் ஒருவனும் 'முன்னேற்றம்' அடைய முடி யாது என்பது அவனுடைய கொள்கை. 'படே படே' கிருஷ்ணசாமி முதலியாரையே அவன் ஆட்டி வைத்த பொழுது, இந்தப் பட்டணத்துப் பையன் எந்த மூலை என்று நினைத்தான். எண்ணிய காரியத்தைச் செய்து முடிக்க, மறுநாள் அதிகாலையிலே அவன் சென்னைக்குப் புறப்பட்டான்.

7

முத்துக்கண்ணுவின் வீட்டை ரத்தினம் தேடிப் பிடித்துக்கொண்டு வந்தபொழுது, மணி ஒன்பது ஆகிவிட்டது. ஆனல், அன்று கல்லூரியில் முத்துக் கண்ணுக்கு முற்பகலில் ஒன்றும் வேலையில்லாததால், இருவரும் வெகு நேரம் சௌகரியமாகப் பேச முடிந்

தது. ரத்தினம் விடைபெற்றுக்கொள்ளும் சமயத்தில், அவனைச் சாப்பிட்டுப் போகும்படி முத்துக்கண்ணு வற்புறுத்தினர். ஆனல், ரத்தினம் அதற்கு இணங்காமல், ஏதோ சாக்குகளைச் சொன்னன். பிறகு, புறப்படும் பொழுது, எதையோ தான் மறந்துவிட்டதாக நடித்து, மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "பார்த்தீங்களா?—நான் வந்த காரியத்தை மறந்தே போயிட்டேன்.—ஆமாம், நீங்கள் வேதவல்லியைக் கலியாணம் செய்துகொள்றதுபோல, ஊரெல்லாம் பேசிக்குதே, மெய்தானுங்களா?" என்று முத்துக்கண்ணுவைக் கேட்டான்.

"ஆமாம்" என்ருர் முத்துக்கண்ணு புன்சிரிப்புடன்.

ரத்தினம் ஒரு நிமிஷம் யோசித்தவாறு உட்கார்ந்தான். பிறகு, "நான் அந்தப் பெண்ணைக் கட்டிக்கப் போவுருப்போலே, உங்களுக்கு யாராவது சொன்ருங்களா?—எனக்கு அது முறை உண்டுங்க" என்ருன்.

இப்பொழுது, முத்துக்கண்ணுக்கு யோசனை வந்துவிட்டது. "நீங்கள் கேட்டதாகவும், ஆனல் முடியாதின்னு மறுத்துவிட்டதாகவும், அகிலாண்டம்மாள் என் தாயாரிடம் சொன்னுங்களாம்" என்று முத்துக்கண்ணு வார்த்தைகளை நிறுத்துப் பேசினர்.

ரத்தினம், "ஹா! ஹா!" என்று பரிகாசமாகச் சிரித்தான். "இப்போதான், படித்த மாப்பிள்ளை, பணக்கார மாப்பிள்ளை—நீங்கள் ஆம்பிட்டுக்கிட்டீங்க! அதுக்கு முந்தி மாப்பிள்ளை நான்தானுங்களே. இதோ பாருங்க, எங்களுக்குள்ளே எவ்வளவோ இருக்கும். நான் என்னுத்தைச் சொல்றது?—அந்தப் பெண்ணைக்

கட்டிக்கவேண்டிய கடமையும் எனக்கு இருக்குது, உரிமையும் இருக்குது. அதுக்கு மேலே சொல்ல எனக்கு இஷ்டமில்லையிங்க. வீணாய் உங்க மனசுக்கு என்னாத்துக்குங்க கஷ்டம்? அந்தப் பெண்ணு உங்களுக்கு வேண்டாமுங்க. அதை மறந்திடுங்க!'' என்று அவன் ஒரு போடு போட்டான். முத்துக்கண்ணின் முகம் குன்றியது. திகைப்பு, கோபம், துக்கம் எல்லாம் சேர்ந்தாற்போல் அவரை வாட்டின.

''அதென்ன மர்மம் அய்யா, அது? என் மனசு கஷ்டப்படுமின்னு, நீங்கள் கவலைப்படவேண்டாம்! சொல்லும்' என்று தம்மை அறியாமல், முத்துக்கண்ணு அதட்டினார். முத்துக்கண்ணின் அதிகாரத் தொனி ரத்தினத்துக்குச் சிறிது ஆச்சரியத்தை உண்டாக்கியது. பார்ப்பதற்குப் பசுபோல் இருந்தாலும், சமயம் வந்தால் மிகவும் முரடராக இருப்பார் என்று தோன்றியது. ஆகவே, அவர் திமிரை அடக்கவேண்டுமென்ற எண்ணம் உதித்தது.

''சரி, சொல்றேன், கேளுங்க. எழும்பூர் பிள்ளை பெக்கற ஆஸ்பத்திரி தெரியுமா?—அங்கே போய், 1947-ஆம் வருஷம், பிப்ரவரி மாதம், 15-ஆம் தேதி இளநீர்ச்சாவடி வேதவல்லியைப்பத்தி என்ன பதிவு செய்திருக்குதின்னு பாருங்க'' என்றான் அவன் நிதானமாய்.

''சங்கதியைச் சொல்லேன், அப்பா!'' என்றார் முத்துக்கண்ணு ஆத்திரத்தோடு. ''அதையும் சொல்லணுமா?'' என்று ரத்தினம் கேட்டபொழுது அவன் முகத்தில் பரிகசிக்கும் புன்முறுவல் ஒன்று ஏற்பட்டது. ''வேதவல்லிக்கு இரட்டைக் குழந்தை

கள் பிறந்து, குழந்தைகள் பிறந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் செத்திட்டுதிங்க, இன்னு எழுதியிருக்கும்!'' என்ருன்.

முத்துக்கண்ணுக்குத் தலையில் இடி விழுந்தாற் போல் ஆகிவிட்டது. சில விநாடிகள் அசைவற்றுச் சிலைபோல் நின்ருர். பிறகு என்ன என்னவோ எண்ணங்கள் வந்தன. வேதவல்லி இரட்டைக் குழந்தைகளுக்குத் தாயாஞளா? இது என்ன உலகம்! ஒன்றும் அறியாக் குழந்தை என்று அவர் நினைத்த வேதவல்லியா அப்படிப்பட்டவள்? அது உண்மையாக இருக்குமா? ரத்தினம் பெரிய மோசக்காரன் என்று எல்லாரும் சொன்ஞர்கள். அவன் எதற்கும் துணிந்தவன். எது வேண்டுமானுலும் செய்வான். அவனை எப்படி நம்புவது? ஆனுல் ருஜுப்படுத்துவதற்குத் தேவையான ஆதாரங்களை எல்லாம் கொடுத்தானே! தலை 'கிறு கிறு'வென்று சுழன்றது. அடக்க முடியாத துக்கமும் கோபமும் தொண்டையை அடைத்துக்கொண்டன; கனைத்தார், பிறகு சீறினுர். ''உன் சங்கதி பூராவும் எனக்குத் தெரியும். நீ சொல்றதுலே பொய், பித்தலாட்டம் இருந்ததோ, உஷார்! தொலைச்சிடுவேன்! என்னுண்டை உன் தகல்பாஜித்தனத்தைக் காட்டாதே!'' என்று உறுமினுர்.

ரத்தினம் அவரை ஏற இறங்கப் பார்த்தான். அவனுடைய 'ரவுடி'த்தனம் மேலிட்டது. ''இங்கே வந்தது என்னுலே தப்பு. நீ எக்கேடு கெட்டுப் போனுல் எனக்கு என்ன வந்தது? எச்சில் பண்டந் தான் ஒணுமின்னுல் எடுத்துக்கோ!'' என்று அவன் சொன்னபொழுது, ''கழுதை!'' என்று கையை ஓங்கிக்

கொண்டு, முத்துக்கண்ணு சென்றார். ஆனால், அதற்குள் ரத்தினம் அவ்விடத்தை விட்டுக் காற்றாய்ப் பறந்துவிட்டான்.

முத்துக்கண்ணு பித்துப் பிடித்தவர்போல் நாற்காலியில் அமர்ந்தார். நல்ல வேளையாக, இந்தச் சமயத்தில் அவருடைய தாயார் அவரிடத்துக்கு வரவே இல்லை. கடிகாரம் மணி பன்னிரண்டு அடித்தது. கல்லூரிக்குப் போகவேண்டிய நினைவு வந்தது. அவசர அவசரமாக உடையை மாட்டிக்கொண்டு மோட்டார் வண்டியில் வெளியே சென்றார்.

ஆனால், கல்லூரியில் அவருக்கு வேலை ஓடவில்லை; யந்திரம்போல் காரியங்களை நடத்தினார். அந்த விநாடியிலேயே எழும்பூர் ஆஸ்பத்திரிக்குச் சென்று, அந்தப் பயல் ரத்தினம் சொன்ன விஷயத்தைப் பரிசோதிக்க வேண்டும் போல் இருந்தது. நண்பராகிய டாக்டர் வேதாசலத்தண்டை சொன்னால், எல்லாவற்றையும் திர விசாரித்துவிடுவார். ஆனால், போயும் போயும் அவரிடத்திலா இந்தச் சங்கதியைச் சொல்வது? சே! சே! உயிர் போனாலும், இவ்விஷயம் அவருக்குத் தெரியக் கூடாது. தமக்கு அதைவிட மானக்கேடு ஏற்படக் கூடுமா? இந்தத் 'துடைப்பக்கட்டை.'க்கா எவ்வளவு பாடு! டாக்ரை இமிசை செய்து,குடத்தைப் புதைத்தும்எடுத்தும்– சீ! சீ! என்ன முட்டாள்தனம்! இவ்விஷயத்தை வேறு யாரிடத்திலும் சொல்லக்கூடாது என்ற தீர்மானத்துக்கு வந்தார். இதில் நம்பக்கூடியவன் சுந்தரம் ஒருவன்தான். அவனும் ஊரில் இல்லை. சுந்தரத்தின் நினைவு வந்ததும், இவ்வளவு துன்பத்துக்கும் காரணம் அவனே என்று கோபம் வந்தது. ஆனால்,

அவனை நன்கு அறிவாராகையால், மறுகணத்திலேயே அவனுக்கும் கிராமத்தில் நடந்த விஷயங்கள் ஒன்றும் தெரியாமலிருக்கலாமல்லவா என்ற சந்தேகமும் வந்தது, இருந்தாலும், சுந்தரம் நல்ல அறிவாளி ஆயிற்றே. அவனுக்கு வேதவல்லியின் கூத்தெல்லாம் எப்படித் தெரியாமல் இருக்கக் கூடும்? ஒருவேளை தன் குடும்பத்தின் பெயர் கெடக்கூடாதென்று ஒளித்து வைத்தானோ? அவனையே இழுத்துக்கொண்டுபோய், அவனுடைய குடும்பத்தின் யோக்கியதையை அவனையே பார்க்கச் செய்வதற்கும் வழி இல்லாமல் இருந்தது. அவன் திரும்ப இன்னும் இரண்டு தினங்கள் இருந்தன! அதுவரையிலும் எப்படிப் பொறுப்பது? கடிகாரத்தைப் பார்த்தார். இன்னும் பத்து நிமிஷங்களுக்குப் பிறகு, ஒருவர் தயவுமின்றி அவன் வெளியே கிளம்பலாம். அவருக்கு ஒரு யோசனை வந்தது. தாமே அந்த ஆஸ்பத்திரிக்குச் சென்று, குமாஸ்தாவுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லி, 1947-ஆம் வருஷத்துப் பதிவுப் புஸ்தகத்தை எடுக்கச்செய்து, அதில் பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதியன்று அந்தக் கழுதையின் பெயர் பதிவாய் இருந்ததா என்று ஏன் பார்க்கக் கூடாது? தாம் அவளை மணந்துகொள்ள எத்தனித்ததாகச் சொல்ல வேண்டுமா? வீட்டு வேலைக்காக அமர்த்த உத்தேசித்த வேலைக்காரி என்றும், ஆனால் மற்றொருத்தி அவள்மீது இழிவான புகார் சொன்னதால், அதன் உண்மையைத் தெரிந்துகொள்ள வந்ததாகவும் சொல்லிவிட்டால் தீர்ந்தது! அவ்வளவுதானே.

பாக்கி இருந்த மூன்று நிமிஷங்கள் செல்லாமல்,

கடிகாரம் நின்றுவிட்டது போல அவருக்குத் தோன்றி யது. ஒரு முறை பேனவின் மூடியைத் திறந்து, மறுபடியும் இறுக மூடினார்; கைக்குட்டையால் முகத் தைத் துடைத்துக் கொண்டார், மேஜையின் அறையை ஒரு தடவை திறந்து மூடினார்; பிறகு ஜேபியிலிருந்த ஒரு காகிதத்தை எடுத்துப் படித்து மறுபடியும் அதை ஜேபியில் வைத்தார்; இவ்வாறு தவிப்பதற்குள் மூன்று நிமிஷங்கள் கடந்துவிட்டன; 'தட தட'வென்று கீழே இறங்கினார்; மோட்டார் வண்டியை ஓட்டிக்கொண்டு, நேராக எழும்பூர் பிரசவ ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

முதலில் தென்பட்ட ஆஸ்பத்திரிச் சிப்பந்தியி விடம், தாம் வந்த காரியத்தையும், தாம் இன்னார் என்பதையும் தெரிவித்துக் கொண்டார். நகரத்தில் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பெரிய ஸ்தானத்தை வகித்த தம் நண்பர்களான சில டாக்டர்களின் பெயரையும் சொன்னார். அதன்மேல் அந்தச் சிப்பந்தி வணக்கத் துடன் ஒரு குமாஸ்தாவினிடம் அழைத்துச் சென்று சங்கதியைச் சொன்னான். அந்தக் குமாஸ்தா, முத்துக் கண்ணுக்கு உட்கார ஒரு நாற்காலியைப் போடச் செய்து, அறையின் உட்புறத்திலிருந்த பழைய பதிவுப் புஸ்தகங்களைப் பார்க்கப் போனான். தாம் செய்யும் வேலை ஒழுங்குக்குத் தவறானதோ என்ற சந்தேகம் முத்துக்கண்ணுக்கு வந்தது. இதை எல்லாம் யோசித் தால், மர்மத்தை உடனே அறிந்துகொள்ள வழி இல்லை என்று சமாதானப் படுத்திக் கொண்டார். இதற்குள் குமாஸ்தா ஒரு தடித்த பதிவுப் புஸ்த கத்தைத் திறந்தவாறு கொண்டுவந்து, "இதோ இருக்

குது, ஸார், அவள் பெயர்—வேதவல்லி, வயது 18, இளநீர்ச்சாவடி கிராமம்—'' என்று சொல்லி முடிப்பதற்குள், முத்துக்கண்ணு எழுந்து குமாஸ்தா விரல் வைத்திருந்த இடத்தை இருதயம் பதைக்கப் பதைக்கப் பார்த்தார். எல்லா விவரங்களும் கொட்டை கொட்டையான கையெழுத்தில் எழுதப் பட்டிருந்தன. இரட்டைக் குழந்தைகள் பிறந்து, இறந்தன என்பதைக் கண்டதும், முத்துக்கண்ணுக்கு மயக்கம் வருவதுபோல் இருந்தது. நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார். வேர்வை வழிந்தோடிய முகத்தைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டார். அவர் பெருமூச்சு விட்டுத் தவித்ததை அந்தக் குமாஸ்தா பார்க்கவில்லை. அந்தப் புத்தகத்தில் சில குறிப்புக்களை உற்றுக் கவனித்தவாறு இருந்தான். பிறகு, "ஓ! இது ஒரு புது கினுசு கேஸ்போலே இருக்குது, ஸார்! போட்டோகூட எடுத்திருக்காங்களே. இதோ கொண்டு வறேன்'' என்று அவன் விரைந்து சென்றான்.

முத்துக்கண்ணு எழுந்தார். உடம்பை முறித்தார். "அட, கடவுளே, இன்னும் போட்டோவையும் பார்க்கணுமா ?'' என்று கைகளைப் பிசைந்துகொண்டிருக்கும் பொழுது, குமாஸ்தா போட்டோவைக் கொணர்ந்து, முத்துக்கண்ணுக்கு முன் நீட்டினான். அதைப் பார்த்த மாத்திரத்தில் ஒரு கணம் அவர் தலை சுழன்றது. ஆனால், ஒரே ஒரு கணந்தான். அடுத்த நொடியில், அவன் முகம் பரமானந்தத்தால் மலர்ந்தது. அந்தப் போட்டோ வேதவல்லியினுடையது அல்லவே அல்ல. அந்த நீண்ட முகம், அகன்ற காதுகள்–ஊஹூம்

இல்லவே இல்லை. வேறு யாருடையதோ அது. ரத்தினத்தின் பித்தலாட்டங்களில் இதுவும் ஒன்று என்பது அவர் ஊகித்ததுதான். தான் வில்லங்கங்களில் அகப்பட்டுக்கொண்ட சில சமயங்களில் தன் பெயரை மாற்றிச் சொல்லி, வேணுமென்றே பிறரை அவன் கஷ்டங்களுக்கு உட்படுத்தினுன் என்று சொன்னதெல்லாம் இப்பொழுது முத்துக்கண்ணுக்கு நினைவுக்கு வந்தது. வேதவல்லியையும் அவளுடைய பெற்ருேர்களையும் ஆட்டிவைப்பதற்கு இதைவிடப் பலமான ஆயுதம் கிடைக்குமா? ஆனுல், போட்டோ விஷயத்தை அவன் மறந்துவிட்டான் போலும். ஒருவேளை அது அவனுக்குத் தெரியாமலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும், அந்தப் பெண் யார் என்று தெரிந்து கொள்ள அவருக்கு ஆவலாய் இருந்தது. அது சுந்தரம் வந்தால் விளங்கிவிடும். இன்னும் 30 மணி நேரம் எப்படியாவது பொறுத்துக்கொண்டு இருக்க வேண்டியதுதான். இப்பொழுது, "பாத்தாச்சுங்களா?" என்று ஆஸ்பத்திரி குமாஸ்தா அவர் சிந்தனையைக் கலைத்தான்.

அசட்டு முகத்துடன் அவர் போட்டோவைக் குமாஸ்தாவினிடம் கொடுத்தார்; பிறகு, அவனுக்கு வந்தனமளித்து, வெளியே சென்ருர். ஆனுல், அவருக்கு வீட்டுக்குப் போக இஷ்டமில்லை. ரத்தினத்தை உடனே மடக்கிப் போட ஏற்பாடு செய்யவேண்டுமென்ற ஆத்திரம் வந்துவிட்டது. ஒரு அயோக்கியன், அவன் இஷ்டம் போல் என்ன செய்தாலும் அதைச் சகித்துக் கொண்டிருப்பது எவ்வளவு பேடித்தனம்? 'மாப்பிள்ளை'யும் செங்கல்பட்டுக்கு ஜில்லா போலீஸ் சூபரிண்டண்டாக மாற்றப்பட்டாரே ஒழிய. இன்னும்

வந்து வேலை ஒப்புக்கொண்ட பாடில்லை. அக்கா புருஷனைப்பற்றி நினைக்கும்பொழுது, நகரில் அவருக்கு அன்பார்ந்த நண்பர், வேங்கடஸாமி நாயுடு சி. ஐ. டி. யில் பெரிய பதவியில் இருப்பது முத்துக்கண்ணுக்கு ஞாபகத்துக்கு வந்தது. மாப்பிள்ளை மூலமாக அவருக்குப் புரொபஸர் முத்துக்கண்ணு நன்ருகத் தெரிந்தார். இந்தச் சமயத்தில், அவர் தமது 'கிளப்'பில் இருப்பார் என்பதும் இவருக்குத் தெரியும். சரி, உடனே அவரைப் பார்த்து அவரால் ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்டு விடுவதென்று தீர்மானித்துக் கொண்டார். அந்தக் 'கிளப்' அங்கத்தினர்களான சிலர் இவருக்கு நண்பர்களாக இருந்ததால், இவர் அடிக்கடி அங்கே போவதுண்டு. அங்கே சிற்றுண்டியும் மேன்மையாய் இருக்கும். நாயுடுவைக் காண முடியாவிட்டால் காபியாவது அருந்திப் போகலாமென்று, அவர் அங்கே சென்ருர். பகலில் சரியாக ஆகாரம் இல்லாததால், முதலில் அவர் தமது பலகாரத்தை முடித்துக் கொண்டு, பிறகு நாயுடுவைத் தேடினுர். நல்ல காலமாய், அவர் சீட்டாட்டத்தில் ஈடுபடாமல் சிநேகிதர்களுடன் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். முத்துக்கண்ணுவைப் பார்த்ததும், "வா, அப்பா, வா, அப்பா!" என்று அவர் அன்புடன் வரவேற்ருர். "அத்திப் பூத்தாப் போலே வந்துட்டயே. காபி சாப்பிட்டு வரலாம், வா" என்று அவர் எழுந்திருந்தார்.

"ஆயிட்டுதுங்க" என்ருர் முத்துக்கண்ணு.

"எங்கள் கிளப் காபி போலே உனக்கு இந்தப் பட்டணத்துலேயே கிடைக்காது, வா."

"இங்கேதான் சாப்பிட்டேனுங்க" என்ருர்

முத்துக்கண்ணு, புன்முறுவலுடன்.

"நல்ல ஆள், அப்பா, நீ! எனக்கு அந்தச் செலவு கூட வைக்கக்கூடாதின்னு நினைச்சிட்டயா?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லையிங்க.—உண்மையான பேச்சு, எனக்குக் கொஞ்சம் பசியாய் இருந்தது. நீங்கள் இருக்கிங்களோ இல்லையோன்னிட்டு அது வேறு சந்தேகம். இதெல்லாம் நமக்குத் தெரிஞ்ச இடந்தானே? காரியத்தைப் பார்த்துக்கிட்டேன்."

"சரி, எல்லாம் சௌக்கியந்தானே?—ஏதோ. வேலை மேலே வந்திருக்கிறுப்போலே தோணுது?"

"ஆமாங்க—தனியாப் பேசணும்."

"ஓ! பேசலாமே" என்று வேங்கடஸாமி நாயுடு, அநுமதி கேட்டுக் கொள்வது போலத் தம் சிநேகிதர்களுக்குச் சமிக்ஞை செய்து, முத்துக்கண்ணுவை ஹாலின் மூலையில் தனியாக இருந்த ஒரு மேஜைக்கு அழைத்துக்கொண்டு போனார். முத்துக்கண்ணும் ரத்தினத்தின் கதையை எல்லாம் சொன்னார்.

"அவ்வளவு போக்கிரியாய் இருந்தால், இத்தனை நாள் சும்மா விட்டுவிட்டிருக்க மாட்டாங்களே, அப்பா!" என்றார் நாயுடு.

"அவன் போலீஸ் 'இன்பார்மர்' ஆனதுனலே, டிபார்ட்மெண்டுக்கு அநுகூலமாய் இருக்கான்னிட்டு சும்மா இருக்காங்களோ என்னமோ" என்றார் முத்துக்கண்ணு.

"சே, சே, அப்படி ஒரு நாளும் இருக்கமாட்டாங்க. குற்றம் செய்தால் விட்டுடுவாங்களா என்ன?—உனக்கு அவசரம் ஒண்ணுமில்லையே? இன்னும் ஒரு மணிநேரம் இருக்கலாமல்லவா?"

"எனக்கு ஒரு வேலையும் இல்லையிங்க. ஒரு மணி அல்ல, ராத்திரி ஒன்பது மணி வரையிலுங்கூட இருந்தால் போவுது."

"எப்படியாவது அவனைப் பிடிச்சுப் போட்டுட்டால் போதுமிங்களே!" என்றார் நாயுடு சிரித்துக்கொண்டு. "சரி, சீட்டாட்டத்துக்கு நீயும் ஒரு கையிலே உட்கார். அதுக்குள்ளே, செங்கல்பட்டு டி. எஸ். பி. பத்திரையாவும் அவருடைய இன்ஸ்பெக்டரும் வருவாங்க. இன்னிக்கு ஒரு கேசுக்காக வந்திருக்காங்க. எவ்வளவு நேரமானாலும் என்னைப் பார்க்காமல் போகமாட்டார். அவரும் கிளப்பிலே ரொம்ப நாளத்து மெம்பராச்சுதே" என்று சொல்லிக்கொண்டே, வேங்கடசாமி நாயுடு முத்துக்கண்ணுவை அழைத்துக்கொண்டு போய், சீட்டாடத் தொடங்கினார்.

சுமார் 7-30 மணிக்கு, டி. எஸ். பி. பத்திரையா தம் இன்ஸ்பெக்டர் சுந்தரராஜுவுடன் வந்து சேர்ந்தார். வேங்கடசாமி நாயுடு முத்துக்கண்ணை அவருக்கு அறிமுகப்படுத்தி, முத்துக்கண்ணு வந்த விஷயத்தைப்பற்றியும் சொன்னார். "அவன் பொல்லாத பயல் போலிருக்குது, ஸார். அந்தக் கிராமத்துக்கே ஒரு பேய் இங்கிருங்க.—அதன் பெயர் என்ன?"

"இளநீர்ச்சாவடி" என்றார் முத்துக்கண்ணு.

இப்பொழுது இன்ஸ்பெக்டர் சுந்தரராஜ் குறுக்கிட்டு, "ஓஹோ! இளநீர்ச்சாவடியா? அவன் பெயர் ரத்தினம்தானுங்களே?"

"ஆமாம்."

"கறுப்பாய்க் குள்ளமாய் இருப்பான். சமீபத்

துலே சிலோன்கூடப் போய் வந்தான்—''

''அவனேதான், ஸார்!'' என்றார் முத்துக்கண்ணு.

''அவனை நேத்தே லாக் அப்புலே வச்சாயிட்டுதுங்க. எஸ். ஐ. சபாபதிக்கு அவன்மேலே பொல்லாத கோபம்'' என்று இன்ஸ்பெக்டர் தம் மேல் அதிகாரியைப் பார்த்துச் சொன்னார். ''சபாபதி கையெழுத்தை இரண்டு இடத்துலே 'போர்ஜ்' செய்துட்டாங்க. அவனையும் அவன்கூட இருந்தவனையும் நேத்துக் கசக்கினப்போ, அநேக விஷயங்கள் வெளியாயிட்டுதாம். ஆவடியிலே திருட்டுப்போன இரும்புக் கம்பிகளையெல்லாம் ஒரு வைக்கல் போருங்கீழே இருக்குதின்னு அவன்கூட இருந்தவன் கக்கிவிட்டானும். அது பெரிய கேஸ் ஆகும்போல் இருக்குது. இங்கே வர்ற அவசரத்துலே, அதைச் சொல்ல மறந்துட்டேன்.''

''நீங்கள் ரொம்ப 'பவர்புல் திங்கர்' ஸார்! நினைச்ச மாத்திரத்திலேயே காரியம் முடிஞ்சு போயிட்டுது'' என்று பத்திரையா வேடிக்கையாக முத்துக்கண்ணிணிடம் சொன்னார்.

''நான் உனக்கு என்ன சொன்னேன், முத்துக்கண்ணு? உண்மையிலே அவ்வளவு போக்கிரியாய் இருந்தால், எங்களவங்க விட்டுவிடுவாங்களா?'' என்று நாயுடுவும் பெருமை யடித்துக்கொண்டார்.

முத்துக்கண்ணு அவர்களுக்குத் தமது வந்தனத்தைச் செலுத்தி, விடை பெற்றுக்கொண்டார்.

அன்றிரவு அவர் அயர்ந்து தூங்கினார்.

படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போதே, சுந்தரத்தின் வரவுக்காகக் காத்திராமல், உடனே இளநீர்

சாவடிக்குப் போகலாமா என்ற எண்ணம் முத்துக் கண்ணுக்கு வந்தது. ரத்தினத்தின் கதியை அங்கே அனைவருக்கும் தெரியப்படுத்தவேண்டுமென்று அவர் ஆத்திரப்பட்டார். ஆனால், இதற்குள் அவன் கைதியான செய்தி கிராமத்துக்கும் எட்டியிருக்கலாம் அதுவும் தவிர, அந்தப் போட்டோவில் இருந்த பெண் யார் என்பதையும் தெரிந்துகொண்டால், விஷயங்களெல்லாம் ஒருவிதமாகப் பூர்த்தி ஆகிவிடும். சுந்தரம் என்னவோ மறுநாள் காலையில் கட்டாயம் வந்து விடுவான். கழிக்கவேண்டியது அன்று பகல் நேரந் தான். இதற்குள், இந்தக் கலவரத்தால் ஒதுக்கி வைத்திருந்த வேலையை முடித்துக்கொள்ளலாம். இவ்வாறு யோசித்து, அவர் அன்று இளநீர்ச்சாவடிக்குப் போவதை நிறுத்திக்கொண்டார்.

மறுநாள் காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் முத்துக்கண்ணு துறைமுகத்தில் ஆஜர் ஆனார். கப்பல் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்போல் தெரிந்தது. ஆயினும், எங்கும் போகாமல், மோட்டார் வண்டியில் உட்கார்ந்தவாறு, பத்திரிகைகளைப் படித்துக்கொண்டிருந்தார். காத்திருந்த ஜனங்களின் கூச்சலிலிருந்து, கப்பல் வருவது அவனுக்குத் தெரிந்ததும், அவரும் வண்டியை விட்டு இறங்கித் துறை ஓரமாகச் சென்றார்.

தன் ஆசிரியர் துறைக்கு வந்ததைக் கப்பலைவிட்டு இறங்குவதற்கு முன்னமே சுந்தரம் பார்த்துவிட்டான். அவர் வருகை அவனுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. ஆனால், அவர் புன்முறுவல் பூக்கும் ஜாடையிலிருந்து, கெட்ட செய்தி ஒன்றுமில்லை என்று அவன்

உணர்ந்தான். கிழே வந்ததும், நமஸ்கரித்து, "வேலையை விட்டுவிட்டு, இங்கே எதுக்காக—யாராவது சிநேகிதாள் வராங்களா?" என்று சுந்தரம் விசாரித்தான்.

"உனக்கு மிஞ்சின சிநேகிதன் எனக்கு யார், அப்பா, இருக்கான்?" என்றார் முத்துக்கண்ணு சிரித்துக்கொண்டு.

"முக்கியமான சங்கதி ஒண்ணும் இல்லையே?"

"அட, எல்லாம் முக்கியந்தான். ஏறு வண்டியிலே. ரத்தினம் பயலை 'லாக் அப்'லே வச்சாயிட்டுது."

"எப்பவுங்க? எப்படி அகப்பட்டுக்கொண்டான்?"

"போலீஸ்காரன் கையெழுத்தையே 'போர்ஜ்' செய்ய ஆரம்பிச்சால் அவங்கள் விடுவாங்களா?"

வண்டியை ஓட்டிக்கொண்டே, ரத்தினம் பாழாக்கிய பெண்களில் எவளுக்காவது இரட்டைக் குழந்தைகள் பிறந்தனவா என்று முத்துக்கண்ணு விசாரித்தார்.

"ஏதோ அதுமாதிரி பேசிக்கிட்டாப்போலே ஞாபகம் இருக்குது. இந்த அக்கப்போரெல்லாம் யாருக்கு வேணுங்க? ஏன், என்ன சங்கதி?"

"சங்கதி இருக்குது.—அதுக்கு முகம் நீண்டு இருக்கும்.—கண்கள் பெரியதாய் இருக்கும்.—"

"ஆமாம், அந்த நல்லத்தூரான் மகள் அப்படித்தான் இருப்பாள்.—சங்கதியைச் சொல்லமாட்டீங்கறீங்களே" என்று சுந்தரம் அலுத்துக்கொண்டான்.

பிறகு முத்துக்கண்ணு, வேதவல்லியின் மீது ரத்தினம் சொன்ன அவதூறையும், அதை ஸ்திரப்படுத்தச் செய்த சூழ்ச்சிகளையும் தெரிவித்தார். வந்த

கோபாவேசத்தில், சுந்தரம் வண்டியைவிட்டுக் கீழே குதித்துவிடுவான் போலிருந்தது.

"அவனைக் குத்திக் கொலை பண்ணாமல் விடமாட்டேன், ஸார். இதனாலே என்ன ஆனாலும் சரி. படவா! ராஸ்கல்! எங்கள் குடும்பத்தைப்பற்றி அப்படிச் சொல்லுகிறான்? அந்த நாக்குலே இனிப் பேச்சு வராமல் செஞ்சிடுறேன்! ஊஹூம் அவனைவிட மாட்டேன், ஸார்!" என்று சுந்தரம் கர்ஜித்தான்.

"நான் சொன்னது அல்ல தப்பாப் போச்சு? அவன் ஒரு பதர்—அவன் எது வேணுமின்னாலும் சொல்லுவான், செய்வான். அவனை ஒரு கணக்குலே வைக்கலாமா? இருக்கிறதைப் பார்த்தால், இன்னும் ஆறு வருஷத்துக்கு அவனை வெளியிலே விடமாட்டாங்கள் போலிருக்குது. நான் என்னத்துக்கு வந்தேனின்னால், அந்தப் பெண் யாருன்னு தெரிஞ்சால், நாளைக்கு நாம் இளநீர்ச்சாவடிக்குப் போறபோது, சங்கதி பூராவும் சொல்லிடலாமின்னு பார்த்தேன்."

சுந்தரம் கைக்கடிகாரத்தைப் பார்த்து, "மணி 9-45 ஆயிட்டுது. நேராய் ஆஸ்பத்திரிக்குப் போய் அப்புறம் வீட்டுக்குப் போகலாமே" என்றான்.

"அவ்வளவு அவசரப்படவேண்டாம்" என்றார் முத்துக்கண்ணு புன்சிரிப்புடன்; "குளிச்சு, சாப்பிடு. நான் காத்திருக்கிறேன்."

"நீங்களும் சாப்பிடக் கூடாதா?" என்றான் சுந்தரம், குறை சொல்வதுபோல்.

"கூடாதின்னு, நான் சொல்லலையே?—உனக்கு இன்னும் கோபம் தணியல்லை" என்று கூறி, முத்துக்கண்ணு சிரித்தார்.

வீட்டுக்குச் சென்றதும், சுந்தரம் தன் பாட்டிக்கு ரத்தினத்தின் கதையைச் சொன்ன பிறகுதான், மறு வேலையைப் பார்த்தான். அந்தக் கிழவி மூக்குமேல் விரலை வைத்தாளே ஒழிய, ரத்தினத்தின் நடத்தை அவளுக்கு ஆச்சரியமில்லை.

"சின்னப்போ இருந்து, அந்தப் பிடை அப்படித் தான், அப்பா!" என்று, அந்தக் கிழவி முத்துக்கண்ணி னிடம் சொன்னுள். "எல்லாம் நம்ப ஜாதி ஜனம் தானே; எப்படித் தெரியாமல் போகும்? நான் இன்னி ராத்திரி குன்னத்தூருலே இருந்தாவணும். நாளைக் குத் திரும்புறபோது, இளநீர்ச்சாவடியிலே இறங்கி, சங்கதி எல்லாம் சொல்லிட்டு வறேன்."

"நாளைக்கு நாங்கள் போருேமே. எங்களோடு வந்து திரும்பிடலாமே" என்ருர் முத்துக்கண்ணு.

"இல்லை, அப்பா, காலையிலேயே நான் போக வேண்டியவள். சுந்தரம் வரான்னிட்டு நின்னுட் டேன். பகல் ஒரு மணி இரண்டு மணிக்குப் புறப்பட ணும். இன்னென்னு செய்யறேனே, ராத்திரி குன்னத்தூருலே தங்கி, மறுநாள் சாப்பாட்டை முடிச்சுக்கிட்டு, இளநீர்ச்சாவடிக்கு வந்திடறேன். தொலையாது, ஒரு கல்லுதானே? நாளை சாயங்காலம் நீங்கள் வர்றபோது, உங்கள் கூடவே திரும்பிட றேன்." இந்த ஏற்பாட்டை அப்பொழுது, ஸ்நானம் செய்து வந்த சுந்தரமும் ஆமோதித்தான்.

சாப்பாடு முடிந்ததும், சிநேகிதர்கள் இருவரும் ஆஸ்பத்திரிக்குச் சென்ருர்கள். போட்டோவிலிருந்த பெண், சுந்தரம் ஊகித்தவள் தான்.

"இந்தக் கழுதை ஓட்டேரியிலே எங்கேயோ

திண்டாடிக்கிட்டு இருக்குது, ஸார். அப்போ, என் ஆபீஸுலே விட்டுடறீங்களா? ரொம்ப வேலை இருக்குது, நாளைக்கும் போகணுமிங்கறீங்க."

"சரி, போகலாம். நாளைக்கு 3-30 மணிக்கு உன் ஆபீஸண்டையே வந்திடறேன். டாண்' இன்னு நாலு அடிக்கிறபோது நாம் இளநீர்ச்சாவடியில் இருக்க வேணும். அதை மறந்திடாதே" என்று முத்துக் கண்ணு அவனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டு அவனை ஆபீஸில் இறக்கி விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

மறுநாள் பகல் மூன்று மணி சுமாருக்கு, வெயிலை யும் கவனியாமல், சுந்தரத்தின் பாட்டி இளநீர்ச்சாவடிக்கு வந்து சேர்ந்தாள். ரத்தினமும் அவன் தோழனும் போலீசாரால் கைதிகள் ஆக்கப்பட்டது, சுந்தரத்தின் பாட்டி சொன்னதன் பேரில்தான், அகிலாண்டம்மாளுக்கும் வேதவல்லிக்கும் தெரியவந்தது.

"ஹூ! அதுதான் போலிருக்குது, அம்மா, மூங்கலான் நேத்து என்னைப் பார்த்துப் பார்த்து, கொன்னுடறாப்போல் முறைச்சான். அப்பாலே—" என்று வேதவல்லி சொல்லி முடிப்பதற்குள், பாட்டி, "மூங்கலான் யார்?" என்று கேட்டாள்.

"அவனுக்கு உடந்தையாய் இந்த ஊருலே ரெண்டு கழுதைங்கள் உண்டுங்க. ஒருத்தனைத்தான் அவனோடு ஜெயிலுலே வச்சுட்டாங்கன்னு சொல்றீங்க. பாக்கி இவன் ஒருத்தன்தான். அவனுக்குத் தெரிஞ்சிருக்கும். தன்னையும் பிடிச்சுப்பாங்களேன்னு பயமிருக்குமல்ல?" என்றாள் அகிலாண்டம்மாள்.

"ஆமாம், ஆமாம், நீ சொல்லறது 'ரைட்' அம்மா. இன்னிக் கார்த்தாலே, நான் கமலாவோடு பேசிக்கிட்டு

இருக்கிறபோது, மூங்கலான் மகன், எதித்தாப்படிக் காலியாய் கிடக்குது பார், மாட்டுப்பட்டி, அதுலே நாலஞ்சு பசங்களோடு கூட்டம் கூடிக்கிட்டு, பட்டணத்தார் நம்ம கிராமத்தைப் பாழாக்கப் பார்க்கறுர்ன்னு சொல்லிக்கிட்டு இருந்தான், அம்மா. அவன் நாயினு பேச்சை எல்லாம் கேட்டுக்கிட்டு இருந்தான் போலிருக்கு."

"பட்டணத்தார் யார்?" என்று பாட்டி கேட்டாள்.

"முத்துக்கண்ணு" என்றுள் அகிலாண்டம்மாள், சந்தோஷத்தை அடக்க முடியாமல், சிரித்துக் கொண்டு. "ஓஹோ! அதுவா? அய்யோ, அந்தப் பிள்ளை பட்டபாடு! ஏன் சொல்றே போ. அது ஒரு பெரிய கதை" என்று பாட்டி, உற்சாகத்தோடு ஒன்றுக்கு நாலாக, ரத்தினம் முத்துக்கண்ணின் மனத்தைக் கலக்கச் செய்த உபாயத்தை வர்ணித்தாள். ஆஸ்பத்திரியில் இரட்டைக் குழந்தை பெற்றவளின் பெயர் வேதவல்லி என்றும், அவள் இளநீர்ச்சாவடி கிராமத்தைச் சேர்ந்தவளென்றும் ரத்தினம் எழுதி வைத்ததைக் கேட்டதும், வேதவல்லிக்கு அழுகை வந்துவிட்டது.

"ஏன், அம்மா, அழறே? அந்தப் பாடையிலே போறவன் வஞ்சகம் எல்லாந்தான் தெரிஞ்சு போச்சே. ஆனுல், நல்ல காலமாய் அந்தக் குழந்தையை போட்டோ எடுத்து வச்சிருந்தாங்கள். அதுலே என்ன மர்மமோ? யார் கண்டாங்க? இல்லாட்டி, ரொம்ப திண்டாட்டமாய்ப் போயிருக்கும். பலானு பலானு ஊரின்னு எழுதி வச்சிருக்குது, பேர் சரியாய் இருக்

குது, வயது சரியாய் இருக்குது.—எல்லாம் அந்தப் பாதகன் சொன்னப் போலேயே இருந்தால், யார்தான் நம்பமாட்டாங்க? முத்துக்கண்ணுக்கு அப்படியே மயிர்க்கூச்சிட்டுப்போயிட்டுதாம். கடவுளே, என்னடா இப்படி ஆச்சுதின்னிட்டு, மரம்போல் உக்காந்திட்டானும். அப்போ, அந்த சுப்பிரமணியக் கடவுளே அந்த குமாஸ்தா மனசுலே பூந்து போட்டோவைக் கொண்டுவந்து காட்டச் சொன்னர் இன்னிட்டுதான் சொல்லணும். என்னங்கறே, அம்மா, இல்லாட்டி போட்டோ சங்கதி அதுக்கு எப்படித் தெரியும்?''

"போட்டோவைப் பார்க்காட்டி, நான் இரட்டைப் பிள்ளையைப் பெத்தேன்னிட்டு, அவர் நம்பியிருப்பாராக்கும்?'' என்று வேதவல்லி கேட்டபொழுது, கண்களில் மறுபடியும் நீர் சுரந்துவிட்டது; முகத்தில் தீப்பொறி பறந்தது.

"நம்பாமே என்ன செய்யும், அம்மா?'' என்று கிழவி சொன்ன மாத்திரத்தில், மதகைத் திறந்துவிட்டாற்போல், வேதவல்லியின் கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் பெருகிவிட்டது.

தன் மகளின் நுட்பத்தை அறிந்த அகிலாண்டம்மாள், கிழவியின் அசட்டுத்தனத்தை மனத்தில் நொந்துகொண்டு, "ஆமாம், ரத்தினத்தின் திருட்டுப் பெரட்டு அவருக்குத் தெரியாததா? அவன் அரிச்சந்திரன்னு, அவன் சொன்னதை எல்லாம் நம்பிடுவாராக்கும்?—ஆயிட்டுது, இன்னும் கொஞ்சம் நேரத்துக்கெல்லாம் அவ வந்திடருரு. அதுக்குள்ளே நீ என்னத்துக்கு வருத்தப்படறே? சும்மா இரு, அம்மா. ஊம், கண்ணைத் துடைச்சிக்கோ. அவர் வர்ற சமயத்

துலே அலங்கோலமாய் இராதே—'' என்று தன் தாயார் சொன்னபொழுது, வேதவல்லி அவளை விழித்துப் பார்த்துவிட்டு, எழுந்து, கொல்லைப்புறம் சென்றாள்.

அவள் இருதயம் துடித்தது. அலங்கோலமாம், அலங்கோலம்! அந்த மன்னன் வருகிறார் என்றுதான் அலங்காரம் செய்துகொண்டு தயாராய் இருக்க வேண்டுமா? அவள் என்ன தாசியா? தாசிக்கும் கேடு கெட்டவளாக அல்லவா செய்துவிட்டார்கள்? தான் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றவள் என்று அவர் நம்பினாரா? ஆஹா! தன்மீது எவ்வளவு கௌரவம்! தன் தாயார் பூசி மெருகிட்டாலும், பாட்டி சொன்ன தில் உண்மை இருக்கவேண்டும் என்றே அவள் ஊகித் தாள். இனி அவரை மணந்துகொள்வதைக் காட்டிலும், சமுத்திரம்போல் கொந்தளித்துக்கொண்டு இருந்த செம்பரம்பாக்கம் ஏரியில் விழுந்து சாகலாம். அவ்வளவு இழிவாக நினைக்க அவருக்கு எப்படி மனம் வந்தது? நம்பிக்கை குன்றுவதற்கு என்ன காரணம் என்று மண்டையை உடைத்துக்கொண்டாள். திடீரென்று, அடிவயிற்றில் திப்பற்றியதுபோல் இருந்தது. ஐயோ! நம்பி மோசம்போனேனே என்று பதறினாள். ஒழுங்கு தவறிவிட்டாலும், அவர்மீது ஏற்பட்ட அன்பி னால், தன்னைக் கொஞ்சிக்குலாவ இடம் கொடுத்தாளே! கல்யாணமாவதற்குள், நல்ல பெண்ணாக இருந்தால் இவ்வித விளையாட்டுக்களுக்கு இடம் கொடுப்பாளா என்று நினைத்தாரோ! ஆனால், அவர் என்ன என்ன சொன்னார்?—என்ன என்ன செய்தார்? சாகும்வரை யில் தன்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்று சத்தியம்

செய்தாரே! நெறி தவறுவிட்டாலும், அவர் சரமாரி யாகப் பொழிந்த அன்புமொழிகளினாலும், காதல் பொங்கி வழிந்ததுபோல் நடித்ததனாலும், தன் இரு தயத்தைப் பறி கொடுத்தாளே! கடவுளே! புருஷன் இவ்வளவு மோசக்காரன் என்று அவளுக்குத் தெரி யாமல் போய்விட்டதே! இனி அவர் முகத்தில் விழிப்ப தில்லை என்று பிரதிக்ஞை செய்துகொண்டாள். ஆனால், தன் தாயாரின் எண்ணம் அவளுக்குத் தெரியும். வீட்டில் இருந்தால், எப்படியாவது அவரை மணந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்திவிடுவாள். அவள் சொல்லைத் தட்ட முடியாது. அது நிச்சயம். ஆகையால் வீட்டை விட்டு எங்காவது தொலைந்து போய்விட வேண்டியதுதான். தான் என்ன ஒரு மாடா, கண்ட வன் நினைத்தபடி விற்கவும் வாங்கவும்? ஒரு முரட்டுத் தைரியம் வந்துவிட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். தனக்குத் தோழியும் பிராண சிநேகிதியு மான பாஸ்டர் பெண் இஸபெல்லாவுடன் தன் கஷ்டத் தைக் குறித்துக் கலந்துபேச வேண்டுமென்று தோன் றியது. அவள் யோசனைக்காரி, தைரியசாலி.—அவள் கூட அவரைப் பார்த்து அங்கீகரித்தாளே! இல்லா விட்டால், கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிட்டால் என்ன? ஆனால், அவளுடைய தகப்பனார் அதற்குச் சம்மதிக்கமாட்டார். எதற்கும் அவளை முதலில் தேடிப் பிடிக்க வேண்டுமென்று மடமடவென்று நடந்தாள். கொல்லையைச் சுற்றி இருந்த மண்சுவரண்டை வந்த தும், அவளுக்கு ரஸ்தாவில் ஒரு கூட்டம் கூடியிருப்பது புலப்பட்டது. வழி வரையிலும் போகப் பொறுமை இல்லாமல், குட்டிச் சுவரின்மீது ஏறி அப்புறம்

குதித்தாள். ரஸ்தாவிலிருந்து கிராமத்துக்குப் பிரிந்த வண்டிப்பாதை நூறடி தூரத்தில்தான் இருந்தது. அவள் விரைந்து சென்று, வண்டிப்பாதையில் மழை ஜலம் போவதற்காக இருந்த கால்வாயின்மீது கட்டப் பட்ட சிறுபாலத்துக் கைபிடிச் சுவரின்மீது நின்று பார்த்தாள். அவள் கண்ட காட்சி அவள் தலையைச் சுழலச்செய்தது. முத்துக்கண்ணின் மோட்டார் வண்டி ஒரு ஓரத்தில் நின்றது. முத்துக்கண்ணின் முகத்தைச் சுந்தரம் மெள்ளத் துடைத்துக்கொண் டிருந்தான். தூரத்தில் ஒன்றும் சரியாகப் புலப்படவில்லை. ஆனால், முத்துக்கண்ணுக்கு முகத்தில் காயம்பட்டிருக்கவேண்டு மென்பது மாத்திரம் நன்கு விளங்கியது. அப்பொழுது, அந்தக் கும்பலிலிருந்து வந்த ஒரு மாடு மேய்க்கும் பையன் வேதவல்லியைப் பார்த்ததும், தானகவே சொல்ல ஆரம்பித்தான்.

"அம்மா, நம்ப ஊட்டுக்கு வருவாரே பட்டணம் முதலியார்—அவருக்கு மூஞ்சி எல்லாம் காயம்! மூங்க லான் மகன் இல்லே?—செஞ்சி, அவன் இம்மாத்தம் கல்லை எடுத்து, காரு திரும்பறப்போ போட்டான் பாரு, கண்ணுடி எல்லாம் சுக்கு சுக்காய்ப் போய் முதலி யார் மூஞ்சி எல்லாம் கிளிச்சிடுத்து. உங்க அண்ணுத்தை அவனைப் பிடிக்கப் பார்த்தாரு. ஆனல் அவன் ஓடியே போயிட்டான்."

"கண்ணுலேகூடக் கண்ணுடி விளுந்துட்டுதாடா?"

"எனக்குத் தெரியாதம்மா. நீ போய்ப் பாரு" என்று அவன் நகர்ந்தான்.

வேதவல்லி கைகளைப் பிசைந்தாள். அவளுக்கு என்னவோ வேதனை செய்தது. இன்னதென்று

சொல்ல முடியவில்லை. அழுகை வந்துவிட்டது. அவர் எவ்வளவு அற்பத்தனமாய் நடந்துகொண்டாலும், பழகினவர்களுக்குக் கஷ்டம் வந்தால் பாராட்டாமல் இருக்க முடியாதென்று தோன்றியது. பத்து வயதுப் பெண்போல் அங்கே ஓடினுள். அவளைக் கண்டதும் கும்பல் விலகியது.

"ஒண்ணும் இல்லே, அம்மா. மேலாகச் சிராய்ச்சி இருக்குது. நல்ல காலம், கண்ணுடித் துண்டுங்கள் கண்ணுலே விழல்லே" என்று சுந்தரம் தைரியப்படுத்து வது போல் உடனே சொன்னுன்.

"அதுக்குள்ளே உனக்கு எப்படித் தெரிஞ்சுது வேதம்?" என்ருர் முத்துக்கண்ணு, ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்கே கூடிய குரலில்.

ஆனுல் வேதவல்லி வாயைத் திறக்கவில்லை.

"சரி, வண்டியில் உட்கார்—"

என்ன செய்வதென்று தெரியாமல், வேதவல்லி வண்டியில் உட்கார்ந்துகொண்டாள்.

"உங்களாலே ஓட்ட முடியுமா?" என்ருன் சுந்தரம்.

"நீ ஒரு பைத்தியக்காரன். எனக்கு என்ன வந் திட்டுது?—இதோ பாருங்கள், மூங்கலான் மகன் ஓடிப் போனுல் தப்பிச்சுக்கமாட்டான். அவனுக்குச் சின்னப் பள்ளிக்கூடம், அவன் அப்பனுக்குப் பெரிய பள்ளிக் கூடம்" என்று முத்துக்கண்ணு அந்தக் கும்பலைப் பார்த்துச் சொன்னபொழுது, அங்கிருந்த பெரியோர் அனைவரும் அப்பொழுதுதான் கிராமத்துக்கு நல்ல காலம் வருமென்று அவர் அபிப்பிராயத்தை ஆமோ தித்தார்கள்.

முத்துக்கண்ணின் வேஷத்தைப் பார்த்ததும் வஜ்ஜிரவேல் முதலியாரும் அகிலாண்டம்மாளும் நடுங்கிப் போய்விட்டார்கள். சுந்தரம் இரண்டொரு வார்த்தைகளில் விஷயத்தைச் சுருங்கச் சொல்லிச் சமாதானப் படுத்தினான். வேதவல்லி மௌனம் சாதித்தவாறே ஒரு மூலையில் நின்றாள். அகிலாண்டம்மாள் மகளையும் முத்துக்கண்ணையும் மாறி மாறிக் கவனித்தாள். மகளின் கோபம் தணியவில்லை என்று அறிந்துகொண்டாள். முகம் இன்னும் கடுவன் பூனையின் முகம் போலவே இருந்தது! அவ்வளவு ரோசமுள்ளவன் மாப்பிள்ளையைத் தேடிக்கொண்டு ஓடுவானேன் என்று உள்ளூறச் சந்தோஷப்பட்டாள். ஆனால், வேதவல்லி அவளை விழித்துப் பார்த்தபொழுது, அவளுக்குச் சிறிது பயம் உண்டாகாமல் போகவில்லை. முத்துக்கண்ணுக்கும் வேதவல்லியின் 'உம்மணாமூஞ்சித்தனம்' அறிந்துகொள்ள முடியாமலே இருந்தது.

இந்த எக்கச்சக்கமான சமயத்தில், அகிலாண்டம்மாள் முத்துக்கண்ணுவைப் பார்த்துச் சொன்னாள்: "அது கோபமாய் இருக்குதுங்க. நீங்கள் தனியாய்ப் பேசி, புத்தி சொன்னால்தான்—"

வேதவல்லி தன் தாயாரை விழுங்கிவிடுவது போல் முறைத்துப் பார்த்தாள். "எனக்கு யாரும் புத்தி சொல்லத் தேவையில்லை. நானேதான் சொல்லிடணும்னு இருக்கேனே" என்று, முத்துக்கண்ணு வரும்போதெல்லாம் தங்கி, சிற்றுண்டி முதலானது உண்பதற்காகப் பிரத்தியேகமாய் இருந்த அறைக்குள் அவள் புகுந்தாள். முத்துக்கண்ணும் தலைகால் புரியாமல் அவளைப் பின்பற்றினார். ஏகாந்தம் ஏற்பட்டதும்

வேதவல்லி கைகளைக் கூப்பி, "உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்—என்னை விட்டுடுங்க! எனக்குக் கலியாணம் செய்துகொள்ள இஷ்டமில்லை. நான் உங்களைக் காண வரவில்லை. என் சிநேகிதி இஸபெல்லாவைப் பார்க்கப் புறப்பட்டேன். எங்கம்மாவுக்குப் பணம்தான் பெரிது. நான் வீட்டுலே இருந்தால், என்னைக் கலியாணம் செய்துகொள்ளும்படி உசிரை வாங்கிடுவாங்கள். அதனுலே நான் வீட்டை விட்டே போயிடப்போறேன். கிறிஸ்தவ மதத்துலேயாவது சேருவேனே தவிர, கலியாணம் செய்துகொள்ளமாட்டேன்!" என்று அவள் கையை அசைத்தாள்.

முத்துக்கண்ணுக்குத் தூக்கிவாரிப்போட்டது. பிறகு வியப்பு, கோபமாக மாறியது.

"வேதவல்லி, நீ சொல்லறதைப் பார்த்தால், நான் உன்னைக் கட்டாயப்படுத்தருப்போல அல்ல இருக்குது?—இதோ பார்! நீ பால் குடிக்கிற குழந்தையல்ல, உனக்கும் பதினெட்டு வயது ஆயிட்டுது. நல்லாத் தெரிஞ்சுக்கோ, ஒருத்தர் மனசைப் புண்படுத்தி நான் ஒரு காரியமும் செஞ்சதில்லை. உனக்கு இஷ்டம் இல்லாவிட்டால், கடவுளே வந்து சொன்னுலும் உன்னைக் கலியாணம் செய்துகொள்ளமாட்டேன்! எனக்குப் பகுத்தறிவு இருக்குது. மரியாதை என்னுங்கிறது தெரியும்.—"

"ஆமாம், மரியாதை தெரியத்தொட்டுதான் அந்த மாதிரி சொன்னீங்க!"

"எந்த மாதிரி?"

வேதவல்லிக்குக் கோபாவேசம் வந்துவிட்டது. துக்கமும் கலந்துகொண்டது. கண்ணீர் வடிய, "எனக்கு

இரட்டைப்பிள்ளை பிறந்ததின்னு நீங்கள் எப்படி நம்பினீங்க?" என்று அவன் மீது சீறி விழுந்தாள்.

"நான் நம்பல்லியே, நம்பினதாக உனக்கு யார் சொன்னாங்க?" அவர் நம்பினாரோ இல்லையோ, இப்பொழுது அவருக்கே தெரியவில்லை.

"பட்டணத்து ஆயாதான் சொன்னாங்களே. அவங்கள் செத்துடல்லயே! இங்கேதானே இருக்காங்க?"

"அந்தக் கிழடா? அந்த மடசாம்பராணி ஒன்றுக்கு ஒன்று உளறினால், அதுக்கு நானா ஜவாப்தாரி? நல்லது, எனக்கும் கோபம் வரும், வேதம். என் சங்கதியையும் நீ தெரிஞ்சுக்கணும் அல்ல? முதல்லே, நான் கலியாணமே வேண்டாமின்னுதான் இருந்தேன். அப்புறம், பணமுடைக்காக, சுந்தரம் தன் வீட்டையும் நிலத்தையும் வாங்கிக்கொள்ளும்படி ரொம்பக் கேட்டுக்கொண்டான். அதன் மேலே இங்கே வந்தேன்.—என்ன என்னவோ ஆச்சுது. போனது போகட்டும். நான் எந்த விதத்திலேயும் உன்னை மரியாதைக் குறைவாய் நடத்தல்லை. இப்போ உனக்கு என்மீது இவ்வளவு வெறுப்பு வந்தப்புறம். நான் இங்கே ஒரு நிமிஷங்கூடத் தங்கமாட்டேன். என்னாலே உன் மனசுக்கு ஒரு கஷ்டமும் கொடுக்கமாட்டேன். வீடு நிலம் எக்கேடு கெட்டுப் போகட்டும்.—நான் இனி இந்த ஊர்ப்பக்கம் காலை வைக்கமாட்டேன், சரிதானே? நீ பயப்படாதே!" என்று அவர் சொன்னபொழுது. முகத்தில் காயம்பட்ட இடத்தில் ஓர் ஈ உட்கார, அவர் முகம் வேதனையால் சுளித்தது. அதே க்ஷணத்தில் அவரை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த வேத

வல்லி, பச்சைக் குழந்தைபோல் தாவி, அவர் கழுத்தை இரு கைகளாலும் கட்டிக்கொண்டு, குலுங்கக் குலுங்க அழுதாள். முத்துக்கண்ணு அவளைத் தட்டி ஆதரித்தார். விஷயங்கள் வெட்டவெளிச்சம் போல் விளங்கி விட்டன; அன்பு ததும்பிய குரலில், அவளை அழைத்தார். பதில் இல்லை. மறுபடியும், "வேதம்!" என்றார். அவள் மார்பில் புதைத்த தலையை நகர்த்தாமல், "ஹூம்" என்று ஈன சுவரத்தில் பதில் அளித்தாள்.

"உங்கள் வீட்டுலே உங்க நாயினுவுக்குப் புதையல் கிடைக்காத போனாலும், எனக்குக் கிடைச்சுட்டுது!" என்று அவளை அணைத்துக்கொண்டார்.

சீக்கிரமாகவே, அவர்களுக்கு வெகு விமரிசையாக விவாகம் நடைபெற்றது என்பதைச் சொல்ல வேண்டுமா?

சூரிய தரிசி

சங்கரராம் எழுதியது

மனத்தைக் கவர்ந்து உள்ளத்தை அள்ளும் ஒரு நவீனம் இது. இவ்வாழ்க்கைச் சித்திரத்தில் தோன்றும் பாத்திரங்களெல்லாம் வெறும் பொம்மைகளல்ல. நம் கண் முன் ஆடி ஓடித் திரியும் ஆண்மக்களும் பெண் மக்களுமே.

கருத்தும் சுவையும் கலந்து ததும்பும் இக்கதையின் போக்கு எடுத்த புத்தகத்தை ஒரே மூச்சில் முடிக்கச் செய்யும்

விலை ரூ. 3-8-0

காமர்ஸ் பப்ளிகேஷன்ஸ்,
41/42, ராயப்பேட்டை ஹை ரோட்,
சென்னை-14

காதம்பரி

மகாகவி பாணபட்டர் இயற்றிய
மகோன்னதமான வசன காவியம்

பாரத நாட்டின் முதல் நாவல்

காதம்பரியின் சுவையை அறிந்தவர்களுக்குக் கரும்பின் ரசமும் தெவிட்டும். எழிலரசியான காதம்பரி, சந்திராபீடனுடைய உள்ளத்தை மட்டுமல்ல, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகக் காவிய ரசிகர்களின் உள்ளத்தையும் கவர்ந்தவண்ணம் ஒப்பற்ற காவிய மங்கையாக என்றும் திகழ்கிறாள். பாணபட்டருடைய அழியாத காவியக் கனவுக்கு மங்காத அழகைத் தருபவள் காதம்பரி. அவளுடைய முழுக் கதையும் - சுருக்கம் அல்ல - இப்போதுதான் தமிழில் முதல்முதலாக வெளிவருகிறது. ஸம்ஸ்கிருத மூலத்திலிருந்து காவியமயமான தமிழ் நடையில் கா.ஸ்ரீ.ஸ்ரீ. மொழிபெயர்த்துத் தருகிறார். இந்த அருமையான கதையை ஸ்வாரஸ்யமான கட்டத்தில் விட்டு பாணபட்டர் மறைந்ததும், இதை அழகாகத் தொடர்ந்து முடிந்தவர் அவருடைய புதல்வர் பூஷணபாணர்.

இந்த இரண்டு பாகங்களும் தனித்தனியே
விரைவில் வெளிவருகின்றன.

காமர்ஸ் பப்ளிகேஷன்ஸ்
41/42, ராயப்பேட்டை ஹைரோட்
ராயப்பேட்டை — மதராஸ்-14

Wrapper printed at P. A S. Press, Post Box 349, Madras-2, MS 268